
# வேலி



வி. ஜெகநாதன்

# வேலி

போர் அலைகளில் பூத்த கவிதைகள்

வி. ஜெகநாதன்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வேலி |
| நூலின் வகை | : | கவிதைத் தொகுப்பு |
| ஆசிரியர் | : | வி. ஜெகநாதன் |
| உரிமை | : | ஆசிரியர்க்கு |
| அட்டைப்படம் | : | அ. அருள்பாஸ்கரன் |
| பதிப்பகம் | : | கீதா பப்ளிகேஷன்<br>கொழும்பு |
| முதற்பதிப்பு | : | 16.12.2001 |
| வெளியீடு | : | கீழைத்தென்றல் கலாமன்றம்<br>திருகோணமலை |
| விலை | : | 100/= |

# பதிப்புரை

"வேலி" என்னும் இக்கவிதைத் தொகுப்பு கீழைத்தென்றல் கலாமன்றத்தின் மூன்றாவது வெளியீடாகும்.

கலை, இலக்கிய படைப்புக்கள் நூலுருப்பெறுவதில் உள்ள மிகப்பெரிய சிரமம் பொருளாதார நெருக்கடிகளும், நூலை விற்பனை செய்வதிலுள்ள தடங்கல்கள்தான். தமிழ் கூறும் நல்லுலகம் இதைக் கருத்தில் கொண்டு இலக்கிய வெளியீடுகளை வாங்கிப் படிப்பதில் ஆர்வம் காட்டினால், இலக்கிய வெளியீடுகளைச் செய்யும் படைப்பாளிகளுக்குச் சிரமங்கள் குறைய வாய்ப்பு உண்டு.

இந்த நூலுக்கு, அணிந்துரை வழங்கிய ஜெ. ஈ. ஜெயசீலன் அடிகளார் அவர்களுக்கும், மதிப்புரை வழங்கிய என். எம். சவரிமுத்து அடிகளாருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. மேலும் இந்த நூலுக்கு, அட்டைப்படம் வரைந்து உதவிய, ஓவியர் திருகோணமலை அருள்பாஸ்கரன் அவர்களுக்கும் கவிதையின் கருத்துகளுக்கு ஏற்ப உள்பட உருவகங்களைத் தீட்டித் தந்த ஓவியர் செல்வன் யூட்சன் அவர்களுக்கும், இக்கவிதைத் தொகுப்பை அழகுற அச்சிட்டுத்தந்த கீதா பப்ளிகேஷன் நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை நவிலுகிறோம்.

கீழைத்தென்றல் கலாமன்றம்
திருகோணமலை
16-12-2001

# அணிந்துரை

1987 ஆண்டு வெளிவந்த "வழிகாட்டி" என்னும் மாதசஞ்சிகை யினூடாக கவிஞர் ஜெகநாதன் எமக்கும், பலருக்கும் அறிமுகமானவர். 1977 தொடக்கம் 1980 வரை வெளிவந்த "மனிதன்" என்ற மாத இதழினூடாக வெளிவந்த அவருடைய கட்டுரைகள், அவர் எழுதி மேடையேற்றிய நாடகங்களினூடாகவும் நம் மானிடத்தின் அடிவேர்களைத் தேடும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவர்.

அவருடைய கவிதைகள் பல கிறிஸ்துவ உருவங்களைப் பயன்படுத்தி எல்லா மனிதர்களையும் தூண்டி எழுப்பும் வகையில் அமைந்திருந்தன. இவற்றில் ஐந்து 'தாய்' என்ற புனை பெயரில் வரையப்பட்டவை. நண்பனே கொஞ்சம் நில் என்ற தொடர் கவிதைகள், நண்பர்களாக, முகமூடி அணிந்த மனிதர்களை, அவர்கள் சமாரித்தனா? (சமாரித்தர் என்பவர்கள் சமாரியா என்ற பிரதேசத்தின் யூதரின் பிரிவினர்) பரிசேயனா? (யூத குருமரபினர்) என்று உண்மை முகங்காணத் தேடுகின்றது. 'நீ எந்தப் பக்கம்' என்ற கேள்வி வலம், இடம், ஒடுக்கப்பட்டோர், ஒடுக்குவோர் என்று இனங்கண்டு சித்திரவதைகளும், கொலைகளும், நிறைந்த ஒரு காலத்தை மனதில்வைத்தே கேட்கப்படுகின்றது. நீதியை வேண்டி விற்போருக்கு, சத்திய முழக்கமிட்டுக் கொல்லப்பட்ட அருளப்பனா? (அருளப்பன் கிறிஸ்துவின் காலத்தவர், புரட்சித்துறவி) பதவியைக் காக்க நீதியை அடகுவைத்த பிலாத்துவா? (பிலாத்து, உரோமை ஏகாதிபத்திய வாதிகளால் பலஸ்தீனத்தில் நியமிக்கப்பட்ட ஓர் உரோமை ஆளுனன்) என்ற கேள்வி, வீரனா? துரோகியா? என்ற கேள்விகள் ஈழத்து வானில் எதிரொலித்து வாழ்விற்கும் சாவிற்கும் முக்கிய தீர்ப்பாயமைந்த ஒரு கால கட்டத்தில் கோலியாத்தின் (இவன் ஒரு பிலிஸ்தியன் மாமிசமலை (போர்வலிமிக்கவன்) முன் எதிர் நின்ற சிறிய தாவீதுகளை (இவன் இஸ்ரயேல் யூதச்சிறுவன்) கவண் வீசிக்கல்லெறிய அழைக்கிறது.

அதே தலைப்பிலுள்ள வேறொரு கவிதை அவர் கிராமத்து மக்களை விமர்சனம் செய்கிறது.

> "மிக்கேல் தூதனுக்கு
> பெருவிழா எடுப்பர்
> லூசிபருக்கும்
> மேடை அமைப்பர்
> சிரித்துப் பேசுவர்
> அன்பாய் நடிப்பர்
> தருணம் வருகில்
> காட்டிக்கொடுப்பர்"

இது இன்றைய பலாத்காரத்திற்கும் அடக்குமுறைக்கும் உள்ளான சூழலைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

'விசாரணை' என்ற தலைப்பில் வரும் கவிதை உண்மை விடுதலை விரும்பிகளுக்கு நேர்ந்த, இன்றும் நடந்தேறும் போஸ்மோட்டம், கொடுமைகளை கரப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம், துடுப்பாட்டம் (கிறிக்கெற்) போன்ற நவீன விளையாட்டு உருவங்களோடு, பண்டைய காப்பியங்களின் கும்பகர்ண, வாலிகளின் இன்றைய சித்திரவதைகளை உருவகப்படுத்துகின்றது.

ஈழவரலாற்றில் 1987 மிகவும் நெருக்கடிகள் நிறைந்த அவ்வாண்டின் மௌனம் சாதித்த சோக ஒப்பாரிகள் மத்தியில் தனிக்குரலாகவே ஜெகநாதன் கவிதைகள் நோக்கப்பட வேண்டும். இவை ஒரு வகையான அரசியல் சிறு இலக்கியங்களே. நிக்கராக்குவா விடுதலைப் போராட்டத்தின் போது ஏனெஸ்ரோ கார்டினா் எழுதிய கிறிஸ்தவ இறையியல்பாடல்களாக, அவா் கவிதைகளை கணிப்பிடலாம். இவற்றில் அந்த எதிர்ப்புக்குரல்களாக 'வடக்கு நோக்கி வரும் இரத்த மகாவலி' போன்றவை எழுந்தன.

ஓர் இருண்டகாலமான 1980 களில், ஒரு பாதுகாப்பற்ற சூழலில் கிறிஸ்மஸ் கீதங்களைக் கேட்டுக்கொண்டு வெளியே தெரியாது மெழுகுவர்த்திகளைப் பற்றிக்கொண்டு சில கவிதைகள் எழுந்தன.

அங்காங்கே எழுந்த மனிதத் தசைகளிலிருந்து எழுந்த புகை மணத்தின் மத்தியில் கல்வாரிக்காக என்ற கவிதை எழுந்தது.

> " எல்லா இடங்களிலும்
> ஏரோது தோன்றியுள்ளான்
> எங்கள் பிள்ளைகளை
> எங்கே ஒளிப்பது"

என்ற ஒப்பாரிகள் பல இடங்களிலும் ஒலித்துக்கொண்டிருந்த பொழுது அத்தாய்மாரின் ஓலங்களைத் துணிவாக வெளிக்கொணர்ந்து

> " ஓர் ஏரோதின்
> அரசு கட்டிலுக்காய்
> எத்தனை குழந்தைகள்
> கொல்லப்பட்டார்கள்?"

கொழும்புத்துறையின் துண்டி மயானத்தின் நிசப்தத்தின் அருகே ஒளிந்திருந்து கொண்டு கடல்அலைகளின் இரைச்சல் மத்தியில் மனித மரண ஓலங்கள் கலந்து

> " பிள்ளைகளை இழந்ததால்
> இராமவில் எழுந்த

இராக்கேலின் அழுகுரல்
இன்னமும்
என் காதுகளில்
ஒலித்துக்கொண்டிருக்கிறது"

என்று வரைந்தார். 1986 ஆம் ஆண்டின் கிறிஸ்து பிறப்பு விழா ஜதார்த்தம் நிறைந்த அக்களிப்பும் சோகமும் நிறைந்த முதல் கிறிஸ்மஸ் போன்று இருந்தது. இதன் மத்தியில் தான் காலம் கடந்த

" அரியாசனத்தில்
ஏரோதுக்கு
அளவுகடந்த ஆசையாம்"

என்ற வரிகள் எழுதப்பட்டன. இருட்டில் ஒளிந்திருந்த ஒரு குழு இதை எப்படி முடிப்பதென அங்கலாய்ந்தபோது அவர்களின் ஆன்ம உள்வெளிகளிலிருந்து கூட்டாக எழுந்த ஓசைச்சொல்தான் "ஒரு கல்வாரிக்காக"

இதைவிட ஓர் அழகான கிறிஸ்மஸ் கவிதையை நான் தமிழில் படிக்கவில்லை.

இந்தக்கால கட்ட போராட்ட களத்தில் விடுதலை இறையியல் பாணியில் ஒரு முக்கியமான காலகட்டத்தின் நிகழ்வுகளை பதிவு செய்து அன்றே அச்சில் கொணர்ந்த பெருமை வழிகாட்டியினுடாக ஜெகநாதனுக்கே சாரும்.

அருள்திரு ஜெ. ஈ. ஜெயசீலன்
பகுதிநேர விரிவுரையாளர்
யாழ் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்

# மதிப்புரை

கவிதை என்பது சொற்கள் ஓசை நயத்துடன் அமைக்கப்பட்டுப் பொருள்தரக் கூடிய வகையில் உருவாக்கப்படும் கற்பனையான அல்லது உணர்ச்சி மிக்க படைப்பு. அதில் கையாளப்படும் மொழி அதைக் கேட்போர் அல்லது படிப்போர் உள்ளத்தில் உணர்வுகளையும் வடிவங்களையும் முன்னிறுத்தும் ஆற்றல் வாய்ந்தது. அம் மொழியில் உருவகம் விரவிக் கிடப்பது ஒரு தனிச் சிறப்பு.

எல்லா மொழிகளிலும் அவ்வவ் மொழிகளுக்குரிய தனித்துவம் கவிதையில் தொனிக்கும். அதனாலேதான், சில கவிதைகளை மொழி பெயர்ப்பது சுலபமானதன்று. இக்குறிப்பின் மறுபக்கம் என்னவெனில் கவிஞன் அல்லது படைப்பாளி ஒருவனின் பண்பாட்டுப் பின்புலம் முழுமையாகக் கருத்தில் கொள்ளப்பட்டால் மட்டும் அவரது கவிதையைப் புரிந்து கொள்வது என்பதில் படைப் பாளியின் வாழ்க்கை, அவ்வாழ்வைத் தொடும் மேடுபள்ளங்கள் இன்ப துன்பங்கள், உறவு முறைகள் முதலியனவும் அடங்கும்.

இன்றைய இலக்கிய பரப்பில், மரபுக் கவிதை, புதுக்கவிதை என்ற வேறுபாட்டு வரையறை எழுந்துள்ளது. புதுக் கவிதைகள் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் ஓய்ந்தபாடாயில்லை. இருந்தும், புதுக்கவிதை, தமிழ் இலக்கியப் பரப்பினுள் வரவேற்கப்பட வேண்டியதொன்று. அது மரபு இலக்கண வரையறைகளுக்கு அப்பால் நின்று இயங்குவதால், புதுக்கவிதை தனிச்சிறப்பைப் பெறுகிறது. இலக்கியம் இலக்கணத்துக்கு முன்பு படைக்கப்பட்டது. பலருடைய படைப்புக்களின் பொதுமை வரையறுக்கப்பட்டு இலக்கணமாகின்றது. காலப்போக்கில், புதுப்படைப்புக்கள் மலர அவைகளைத் தொடர்ந்து புதிய இலக்கணம் வகுக்கப்படலாம். ஆயினும் இன்றைய படைப்பாளரின் சுதந்திரம் பண்டைய படைப்பாளரின் படைப்பு வரையறைகளினால் பாதிக்கப்படக்கூடாது. புதுக்கவிதையில் சொல்லடுக்கை விட சொற்களாலான பிம்பங்களுக்கு முன்னிடம் அளிக்கப்படுவது போல் தெரிகிறது. இது இக்கவிதையின் சிறப்பான பண்பு. குறுகத் தறித்த சில சொற்கூட்டங்களுக்குள் ஒரு கருத்தையோ அல்லது உணர்வு நிலையையோ கேட்பவரை ஈர்க்கும்படி உருவகம் மூலமாகவோ அல்லது வேறு வடிவங்கள் மூலமாகவோ நயத்துடன் கூறும் இயல்பு புதுக்கவிதைக்கு உள்ளதுபோல் தெரிகிறது.

அந்தவகையில் ஊழல்கள் எனப்படுபவற்றை விருப்பு வெறுப்பின்றி எதார்த்தவாதி வெகுஜனவிரோதி என்பதற்கு இணங்க தமது புரட்சித் தராசில் எடைபோடுகிறாரென்றால், அங்கு ஜெகநாதன் என்னும் சீர்திருத்தவாதி தமது கைவரிசையைக் காட்டுகிறார் என்பது பொருள்.

அவரது கவிதைகள் பலவும் எண்பதுகளின் பிற்பகுதியிலிருந்து இன்றுவரைக்கும் வெவ்வேறு இலக்கிய பருவ இதழ்களிலும் ஏடுகளிலும் வெளிவந்தவை. பாதுகாவலன் என்னும் வார இதழ், திருமறைக் கலாமன்றத்தின் கலைமுகம் என்ற காலாண்டு இலக்கிய இதழ், "வழிகாட்டி" என்னும் கத்தோலிக்க ஏடு முதலியவை இவரது படைப்புக்களைத் தாங்கி வந்தன.

ஈழத்தில் புதுக்கவிதை பெரிதாக ஆதிக்கம் செலுத்தாத ஒரு கால கட்டத்தில் தனது புரட்சிக் கருத்துக்களுக்கு திரு. வி. ஜெகநாதன் அவர்கள் புதுக்கவிதை வடிவம் கொடுக்கத் தொடங்கி விட்டார். அவரது எழுத்தாற்றல் இன்று அவரை ஒரு தரமான கவிஞனாக மட்டுமல்ல, சிறந்த நாடக ஆசிரியராகவும் வேறுபட்ட அரசியற் சிந்தனையாளனாகவும் இனம்காண வைத்துள்ளது.

அவரது கவிதைகளைப் புரிந்து கொள்வதற்கு அவரது பண்பாட்டு பின்புலம் இன்றியமையாததாகின்றது. அவரது ஆளுமையின் பன்முகப்பட்ட திறன்களும், பாடகன், எழுத்தாளன், நடிகன், நெறியாளன், சமூக தொண்டன் தளங்களும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை. எடுத்துக் காட்டாக, சமய நடைமுறைகள், பழக்க வழக்கங்கள் சிலவற்றைச் சாடி அவைகளைக் கேள்விக்குறியாக்குகின்றார் என்றால், ஜெகநாதன் என்னும் சமய வாதி களம் குதித்துள்ளார் என்பது பொருள்.

இக்கவிதை நூற்தொகுப்பு ஜெகநாதன் என்னும் படைப்பாளியின் புரட்சிக் கருத்துகளை, விமர்சனங்களை, அடிமனதின் ஏக்கங்களை அவர் வாழ்வின் தத்துவங்களை, சமகால வரலாற்றின் குறிப்புகளைத் தாங்கி வருகின்றது.

"வேலி" என்ற தலைப்பு ஈழத்தமிழர் தமது நிலையை நிதானமாகப் படம் பிடித்துக் காட்டுவது போல்படுகிறது, வேலி என்பது எல்லையைக் குறிக்கும், இன்றைய தமிழினத்தின் சிக்கல்களும் தாம் சுயநிர்ணய உரிமையுடன் தமது எல்லைகளுக்குள் சுதந்திரமாக வாழும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. வேலி என்பது காவல் என்றும் பொருள்படும். ஒருபுறம் ஆள்பவர்களின் காவல், மறுபுறம் ஆளப்படுபவர்களின் காவல். இந்நிலையால் மக்கள்வாழ்வு இருபுறமும் சீரழிந்து சிதைந்து போயுள்ளது. வேலியே பயிரை மேய்ந்து கொண்டிருப்பதை இந்நூலில் வரும் வேலி யென்னும் கவிதை காட்டுகின்றது. இக் கவிதை தமிழ் மக்கள் "பாதுகாப்பு" என்ற சுமையால் படும் அவலங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

ஒரு சில கவிதைகள் மூலம் ஆசிரியர் தமது சொந்த வாழ்க்கையின் சில பக்கங்களை வாசகர்களுக்கு அறியத்தருகிறார்.

ஓ!

மரண தேவதையே

நான்
தலை மறைவாகவில்லை
என் வாழ்க்கையே
தலைமறைவாகி விட்டது.
இருந்தும்
நீ இன்னமும்
என்னை
தேடுகிறாயாமே

தமிழ் இளைஞன் மத்தியில் விடுதலைத் தத்துவங்கள் முரண்பாடுகளை ஏற்படுத்த அவர்கள் ஒருவரை ஒருவர் பழிவாங்கிய காலத்தில் தன் உயிரைக் காத்துக் கொள்ள தலைமறைவாக வேண்டியிருந்தது. மரணம் தன்னை எவ்வேளையிலும் எதிர் கொள்ளலாம் என்றாலும், தான் ஏன் ஒளிந்திருந்தேன் என்பதை

ஓ
மரண தேவதையே
நானும் ஒளிந்திருக்கிறேன்
பயந்து அல்ல
பார்த்துக் கொண்டு.

எனப்பார்வையாளனாக தம்மை வைத்து விளக்கம் அளிக்கிறார்.

தேடப்படுவோர் பட்டியலில் என்ற கவிதைத் தொடர் வரிகள் தன்னை எதிர்நோக்கியிருந்த ஆபத்தின் அண்மையையும் அதில் தான் சிக்குப் பட்டால் தனக்கு ஏற்படக்கூடிய விளைவையும் சொல்லிக்காட்டுகிறார். ஒதுக்குப் புறமான ஒரு பனங்கூடலுக்குள் தலைகீழாய்த் தொங்கும் வௌவால் போல் நானும் நான்கு சுவர்களுக்கிடையில் இருந்து தவிக்கிறேன். எனக் கூறி

"எனது செம்மண் தெருக்களில்
ஒரு முறை மட்டும் நான்
உலவி வரவேண்டும்..........."
எனத் தான் நிறைவுபெற, விருப்பத்தையும் தெரிவிக்கிறார்.

பல கவிதைக்குள்ளும் கவிஞன் ஜெகநாதனது மனிதம் பற்றிய சிந்தனைகள் அப்பட்டமாகப் பீறிட்டு நிற்கின்றன.

" என் உணர்விற்குள்ளே
நான் (மனிதத்தை)
தேடுதல் நடத்துகிறேன்...."

எனக் கூறி
"மனிதம்
கோரிக்கை அளவுகளில்
பவளக் கற்களாக
பட்டொளி சொட்டியதைத்தவிர
கொலுவிருக்கவில்லை"

என மனமுடைந்து புலம்புகிறார். இருந்தும் "உனது சுவடுகளில்" என்னும் கவிதையில், கிறிஸ்துவின் நம்பிக்கையில்

மானுடம் உயிர்த்தெழும்
மனுக்குலம் உயிர்த்தெழும்

என்பதை உறுதியாக நம்புகிறார். மனிதத்தைப்பற்றி ஓர் அறிவுரையும் வழங்குகிறார்.

" தேவைக்குமேல் பொருளீட்டும்
மனிதனது இதயம்
பொருளாகிப் போவதனால்
மனிதம் அங்கு சாகும்."

"பாரச் சுமையை மக்கள் தோள்களின் மேல் சுமத்தி விட்டிருக்கிறேன். ஆயினும் மனிதத்துக்காக அழுது வடிகின்றேன்.... மனிதம் தொலைந்து போனதாக ஓர் இனம்புரியாத வருத்தம்" என சில மனிதர்களின் கபடத்தையும் கவிஞரின் ஏக்கத்தையும் எடுத்துக் காட்டி, இவருடைய கவிதைகள் பல ஈழத் தமிழர் வரலாற்றின் அண்மைக்கால நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. "உனது நினைவாக" என்ற கவிதை இந்திய அமைதிப்படையினர் காலத்தின் கொடுமையைச் சித்தரிக்கிறது. கடல் கடந்து வந்த சுடுகலம் ஏந்திய துச்சாதனர் கண்களில் இரவு வேளையில் எந்தப் பெண்ணும் பட்டிருக்கக் கூடாத காலம். "வெளியே வரப்பயந்து, விழிபிதுங்கி புற்றுக்குள் பதுங்கியிருக்கும் சுண்டெலிபோல்" இக்கவிஞன் போன்றோர் வாழ்ந்த காலம் "வடபுலத்து வான் முகம் உடைப்பெடுத்து ஓடிய" காலம் அது. காரணம், எத்தனை மாத்தாள் மரியாள்கள் தங்கள் சகோதரர்களுக்காக அழுது புலம்புகிறார்கள். "எத்தனை விதவைகள் தங்கள் மைந்தர்களைத் தேடி வீதிகளில் விம்முகிறார்கள்.... எத்தனை சூசை மரியாள்கள் தங்கள் பிள்ளைகளுடன் ஏகிப்துக்கு ஓடுகிறார்கள்..." இன்றைய கால கட்டத்தையும் அனல் வரிகளில் எழுதி ஒரு புறம்

" சிவப்பு நெல்மணிகளாய்
கண்ணீர்த் துளிகள்

எரிவுடன் உதிர்ந்தன''
என்றும், மறு புறத்தில்
''பசிப்பாம்பு தீண்டியதால்
அலரி விதைத் சஞ்சீவியில்
சுகங் கண்டோர் இழவையா
சொல்லியழ?''
என நெஞ்சுருக வினாத்தொடுக்கிறார்.
'' பிறந்த மேனியாய்
குப்புறப் படுக்க வைத்து....

என்று தொடங்கும் கவிதை இலங்கைக்கு மட்டும் அல்ல, எங்கு எங்கு சித்திரைவதை முகாம்கள் உள்ளதோ அங்கெல்லாம் பொருந்தும். இக்கவிதைகள் பலவற்றிலும் அரசியல் கல்லெறிகள் அபாரமாக விழுகின்றன. ''சமாதானத்துக்காக யுத்தம் கண்டிக்கப்படுகிறது. விடுதலைப் போராளிகள் மட்டில் ஒற்றுமையின்மை எமது எதிரி எண்ணெய்க்குப் பதிலாய் இரத்தத்தையும், உணவுக்குப் பதிலாய் மனித தசையையும் எமக்குப் பரிசாக்கினான்... ஒற்றுமைப் பக்கங்களை கிழித்துக் கிழித்து ஒத்திகை பார்க்கும் துரோகத்திற்கு எமக்குக் கிடைக்கும் பரிசா? ஊர் இரண்டாகினால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்தான்.

''நமக்குள் நாமே நையப் புடைபட்டபோது நெறி கெட்டுப்போன ஒரு காட்டு அலியனை வீட்டுக்குள் நுழைவதற்குப் பச்சைக் கொடி காட்டினோம்'' என்கிறார். இலங்கைத்தீவில் அரசமரத்துக்குக் கொடுபடும் மதிப்பு மனிதர்களுக்கு கொடுபடுவதில்லை. அந்நிலையை சாலை ஓரங்களில்.... சடைத்துப்புடைத்த அரச மரங்களாய் கண்ணைக் கவருகின்ற வண்ணச் சிலைகளாய் புத்த தர்மம் எனைப்பார்த்து நளினம் செய்தது. இனப் பிரச்சினையின் ஒரு காரணியைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

அரசியல் வாதிகளைக் கிண்டல் செய்கிறார் ''தற்காலிகமாக நீ குந்தியிருக்கும் கதிரையில் மற்றவர்கள் இருந்து விடுவார்களோ என்ற அச்சத்தினாலா உனது ஒரு சேட்டையும், கதிரையில் தொங்கவிட்டிருக்கிறாய்? தேசத் துரோகிகளையும் விட்டு வைக்கவில்லை. ''பசுவின் பாலும் கோழி முட்டையும் பெட்டிச் சிம்மாசனமும் உன் புத்தியைக் குழப்பி விட்டதாலா தேசியத்தை விலை பேசினாய்......''

கல்லால் எறிந்தும், தடியால் அடித்தும், வீட்டுக் கூரையைத் தட்டியும் துன்பம் விழைக்கும் தீயவர்களிடமிருந்து மீட்கப்பட ''ஓ! கிறிஸ்துவே நீர் இனிப்பிறக்க வேண்டியது பெத்தலேகமில் அல்ல, எமது பனங்கூடலுக்குள்தான்'' என்றும், சாதியத்தை அடித்துத்துரத்த ''சத்தியன் கிறிஸ்துவைப்போல் சாட்டையை எடடா கையில்'' என அறை கூவி பாபேல்

கோபுரத்தின் பாடம் புகட்டுகின்ற பாடம் தனை மறந்தீர்" என விவிலிய பிம்பம் ஒன்றை நினைவு கூரச் செய்கின்றார்.

இவ்வாசிரியர் சமூக ஊழல்களைச் சுட்டிக்காட்டும் விதம் எளிமையானது, மனத்திற் பதிவது "கலப்படமாய் கள்ளத்தராசாய் பதுக்கலாய் கையூட்டாய் போகப் பொருளாய் கள்ளக்கணக்காய், கடும் வட்டியாய், இன்ரக்கூலராய், பொன்னாய் மண்ணாய் மனிதத்தை வீழ்த்தும் பெண்ணே" எனக்கூறி அனைத்துக்கும் காரணமாய் இருப்பது "சுயநலம்" என முடிப்பது சுவையானது, சிந்திக்க வைப்பது. பம்பலப்பிட்டிக் கடற்கரையில் ஒரு சிகரட்டை நான்கைந்து பேர் உறிஞ்சிச் சிதைப்பதைப்போல் "குப்பத்துப் பூக்கள்" சிதைவதைப் பார்த்து மனம் வெதும்புகிறார். அதேவேளை "சட்டத்தைச் சுமந்துவரும் ஆன்மா செத்த வேலிகள் குப்பத்துப் பூக்களை துரத்தியடிக்கும் போது" வெறுமை வயிற்றுக்கு தீனிபோட உடலை விற்பனை செய்யும் குப்பத்துப் பூக்களுக்கு விடுதலை எப்போது என வினவுகிறார்.

தத்துவம் பேசுவது இக்கவிஞனுக்கு கைவந்தகலை "வறுமைக்கு இனம் மதம் என்ன சாதி என்ன நிறமும் என்ன? கொடுமைக்கு குலமென்ன கோத்திரந்தான் என்ன?....... சிங்களவர்க்கு, தமிழருக்கு, முஸ்லீம்கட்கு பறங்கியர்க்கு வறுமை வேறு பசி வேறு வகுத்தவர் யார்?" என்றும் சித்தாந்தம் பொழிகின்றார் இக்கவிஞர் "ஒரு நிகழ்வுக்கு ஒன்று போல் பல காரணங்கள் நிலவியிருக்கும். பலதிற்குள்ளும் ஒரு காரணம் முதன்மையாக முழுமையாக முகிழ்ந்திருக்கும்" இயற்கை தரும் சுகம் இல்லறச் சோலை பெண்ணியம் கலையுலகின் மவுனச்சதி நட்பு, தியானம், பற்றியும் தனது கருத்துக்களைக் கூறும் இக்கவிஞன், மீன்பாடும் மட்டுநகர் பெருவெள்ளச் சீற்றத்தால் அழிந்த நிலை எண்ணி வருந்துகிறார். மற்றும் கவிதைகளில் இல்லாத அழகு மொழியையும் பிம்பங்களையும் எழுத்தால் வரைந்து "புன்னகை மன்னவளே, விருந்தோம்பல் அறங்கண்ட உன் மக்கள் நிலைகண்டு பொலிவிழந்து போயினையோ? மென்மளே வன்மனத்தோர் புவிழக்கச் செய்தனரோ?" என்று புலம்பி நம் உள்ளங்களைத் தொடுகிறார்.

உலகின் இருப்புக்கு இன்று அச்சுறுத்தல் விளைக்கும் சூழல் மாசடைதலைப் பற்றியும் "காத்தல்" என்னும் கவிதையில், மரங்களை அழிப்பவர்களுக்கும் எரிபொருட்களால் வானை மாசுறுத்துபவர்களுக்கும் அணுக்குண்டுச் சோதனையால் பஞ்சபூதங்களை வருத்தி" ஓசோன் அச்சுறுத்தல் செய்பவர்களுக்கும் நிகழ்காலந்தான் உமக்கு விதியென்று வகுத்தவரே எதிர்காலம் என்னவாகும் என்ற கேள்வியை விடுக்கின்றார்.

இவ்வாறு பல்வேறு கருத்துகளைத் தாங்கிவரும் இக்கவிதை நூல் படிப்பவரைச் சுவைக்க வைக்கும், சிந்திக்க வைக்கும்; பயன் தரும்.

நீ. மரிய சேவியர் அடிகள்
திருமறைக்கலாமன்றம்.

## என் நினைவுப் பதிவுகளிலிருந்து ...

இக்கவிதைத் தொகுதி எனது நான்காவது தொகுப்பு. 1984 இல் "ஈழம் என்னை அழைக்கிறது" என்ற தொகுதியும், 1985 இல் "நெருப்பையும் சுடும் நெஞ்சின் வேதனை" என்ற தொகுதியும் தமிழ் நாட்டில் அச்சிடப்பட்டது. இக்கவிதைத் தொகுப்பு, பெண்கள் பற்றிய பிரச்சனை தொடர்பாக வெளியான முதல் தொகுப்பு என்று கருதுகிறேன். அதே ஆண்டின் பிற்பகுதியில் "நெஞ்சை மிதித்த அந்த நினைவுகள்" கவிதைத் தொகுதியும் யாழ்ப்பாணத்தில் அச்சானது. செங்கனல் என்னும் புனைபெயரில் இக்கவிதைத் தொகுதிகள் வெளிவந்தன.

1977 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஜெயசீலன் அடிகளாரால் 'மனிதன்' என்ற மாதாந்த ஏடு வெளியிடப்பட்டது. அதன் மூன்று வெளியீடுகளுக்கு நான் ஆசிரியராகச் செயற்படும் வாய்ப்புக் கிடைத்தது. பின் யாழ்பல்கலைக்கழக மாணவர்களுடன் சேர்ந்து 'மனிதன்' ஆசிரியர்குழு உருவாக்கப்பட்ட போது அக்குழுவில் நானும் ஒருவனாக இருந்து செயல்பட்டேன். இந்த அரியவாய்ப்பை எனக்குத் தந்தவர் எனது அன்பிற்கும் மதிப்புக்குமுரிய ஜெ. ஈ. ஜெயசீலன் அடிகளாவார். சமூகத்தைப் பற்றிய எனது அறிவுக் கண்ணைத் திறந்து வைத்து எனது எழுத்து வளர்ச்சிக்கு பலவழிகளிலும் பக்கபலமாக இருந்து ஆக்கமும் ஊக்கமும் தந்த அடிகளாருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1970 ஆம் ஆண்டு பாதுகாவலன் பத்திரிகையில் எனது ஒரு உருவகக் கதையும், ஒரு கவிதையும் வெளிவந்தது. அதன் பின் 1978 இன் பிற்பகுதியிலிருந்து 1980 வரை சத்தியவேத பாதுகாவலனில் அதன் உதவி ஆசிரியராகப் பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்தவர் அருள்திரு அன்ரன் மத்தாயஸ் அடிகளார்தான். அப்போது அவர் யாழ்ப்பாணம் கத்தோலிக்க அச்சகத்தின் பொறுப்பாளராகவும், பாதுகாவலன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் இருந்து செயற்பட்டவர். அக்கால கட்டத்தில் இயக்கங் குன்றிக் கிடந்த அச்சகத்தையும், பாதுகாவலன் வார ஏட்டையும் தனது அயராத உழைப்பாலும் அறிவாற்றலாலும் உயர்நிலைக்குக் கொண்டு வந்த பெருமைக்குரியவர். அவரை நான் நன்றியோடு நினைவு கூருகிறேன்.

இக்கால கட்டத்தில்தான் எனக்கு கவிதை எழுத வாய்ப்புக் கிடைத்தது. என் எழுத்தாற்றலுக்கும் இறக்கைகள் முளைக்கத்

தொடங்கியது. நான் கவிஞனோ இல்லையோ நான் அறியேன். ஆனால் என் கவிதைகளும், சிறு கதைகளும் கருத்தியலும் விரும்பிப்படிக் கப்பட்டது. என் எழுத்தாற்றல் வளர்வதற்கு இந்தக் களந்தான் மிகுந்த வாய்ப்பாக அமைந்தது.

1978 இல் சட்டத்தரணி தவபாலன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் வெளியான "செவ்வந்தி" என்ற சட்ட இலக்கிய சஞ்சிகை நடத்திய குறுநாவல் போட்டியில் எனது 'அழுகைக் குரல்கள்' என்ற குறுநாவலுக்கு இரண்டாவது பரிசு கிடைத்தது. நண்பரும் எழுத்தாளருமான காலஞ்சென்ற காவலூர் எஸ். ஜெகநாதனுக்கு முதல்பரிசு கிடைத்தது. எனது "ஈழம் என்னை அழைக்கிறது" என்ற கவிதைத் தொகுதியை தமிழ்நாடு கொண்டு சென்று அதை அச்சுப்பதிப்பதற்கு எனது தோழர்களிடம் கொடுத்தவர் நண்பர் காவலூர் எஸ். ஜெகநாதன். அவர்களை இக்கட்டத்தில் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

இத்தனைக்கும் நான் ஒரு நடிகனாகத்தான் களம் இறங்கியவன், பள்ளியில் படிக்கும் போதே எனது நடிப்பாற்றலை இனங்கண்டு, மனங்கொண்டு என்னை இத்துறைக்குள் இழுத்துவிட்ட ஆசிரியப் பெருந்தகைகள் கரவெட்டி வின்சென்ற் வசாவிளான் சபாநாயகம், உரும்பிராய் கதிரவேல், குருநகர் திருமதி லூர்துநாயகி பாக்கியநாதன் ஆகியோர்களை மிக்க நன்றியோடு நினைவு கூருகிறேன். நடிகனாகத்தான் என். எம். சவரிமுத்து அடிகளார் உரும்பிராய்க்குப் பங்குக்குரவராகப் பணிபுரிய வந்தபோது அவரைச் சந்திக்க நேர்ந்தது.

கிராமத்தின் எங்கோ ஒரு மூலைக்குள் முடங்கிக்கிடந்த என்னை நாடகக் கலை அரங்கில் ஒளிவீசுமபடிக்கு களந்தந்து, வளம் தந்து, வலுவூட்டி விட்டவர் சவரிமுத்து அடிகளார்தான். அவரது ஆளுமைமிக்க நெறியாள் கைக்குள்நான் புடமிடப்பட்டவன். குருசிஷ்ய உறவுமுறைக்குள் ஈர்த்துக் கொள்ளப்பட்டவன். நடிப்புக் கலையின் பரிமாணங்களைப் புரிந்து கொள்வதற்குப் பக்குவப்படுத்தியவர் அடிகளார்தான். 1992 இல் திருமறைக் கலாமன்ற வெளியீடான 'கலைமுகம்' காலாண்டுச் சஞ்சிகையில் இருவருடங்கள் இன்பராஜன் என்ற பெயரில் அதன் துணை ஆசிரியராகப் பணிபுரிய வைத்தவர். விவிலியத்தை முதலிலிருந்து இறுதிவரைக்கும் "திருமறை நூல் நாடகவரிசை" என்ற தொடரில் நாடகமாக்கும் பெரும் பணியைத் துணிந்து என்னிடம் ஒப்படைத்தவர். இத்தனைக்கும் என் இதயத்தின் அடியாழத்திலிருந்து அவருக்கு நன்றி நவில்கிறேன்.

'கலைமுகத்தில்' நான் எழுதிய கவிதைகளையும் ஜெயசீலன் அடிகளாரால் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட "வழிகாட்டி" என்ற சஞ்சிகையில் வெளியான கவிதைகளும், வேறு சில கவிதைகளும் இந்தத் தொகுப்பில் இடம்பெறுகின்றன.

எனது முன்னைய கவிதைத் தொகுப்புக்களில் மரபு சார்ந்த கவிதைகள் விமர்சிக்கப்பட்டன. புதுக்கவிதை அலை வீசத் தொடங்கியதால் மரபிற்கு மௌசு குறையத் தொடங்கியது. இது காலத்தின் அவசியந் தான். கவிதையை எளிமையாக்கி விடுவதால் அதன் தரம் கெட்டுவிடுவதில்லை. எந்த வடிவமானாலும் அதற்குள் ஒரு வீரியம் இருக்க வேண்டும். மிகச்சிரமப்பட்டுதான் கவிதையை புரிந்துகொள்ள வேண்டும் என்று எழுதுவதும் ஆரோக்கியமானது அல்ல என்பது என் பணிவான கருத்து. கவிதையின் வடிவம்பற்றி நான் கவலைப்படுவதில்லை. என்னைப் பொறுத்தவரையில், செழுமையான, அழகியல்மிக்க, உணர்ச்சியுள்ள கூரிய, அனல் சொற்கட்டுகளும் சிறந்த கவிதைதான்.

இந்த கவிதைத் தொகுப்பிற்கு அணிந்துரையும், மதிப்புரையும் தந்த என் இரு குரு மணிகளுக்கும் என் மனமார்ந்த நன்றி. அத்துடன் கலைமுகத்தில் வெளிவந்த எனது கவிதைகளை மனங்கோணாமல் ஒளி நகல் செய்து தந்த கொழும்பு திருமறைக் கலாமன்றப் பொருளாளர், சகோதரி செல்வி சுமதி ஏரம்பு அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள
வி. ஜெகநாதன்

## சமர்ப்பணம்

ஹாமோனிய வித்துவானும்
சிறந்த பாடகனுமாகிய
எனது
அன்பின் தந்தை
ஞானப்பிரகாசம் விசுவாசம்
அவர்களுக்கு
இந்த
கவிதைப்பூக்கொத்து
சமர்ப்பணம்

வி. ஜெகநாதன்

# வாருங்கள்!



வாருங்கள்!
புண்ணுக்கு
புனுகு தடவுவோம்
சாக்கடைகளை
மலர்களால் மறைப்போம்
கல்லறைகளுக்கு
வெள்ளை அடிப்போம்
கலை அரங்குகள் நடத்துவோம்
விருந்துண்டுகளிப்போம்
விழாக்கள் எடுப்போம்
சமாதானத்தை
அறிக்கையிடுவோம்.

வாருங்கள்!
சமாதானத்திற்காக
பேரணி நடத்துவோம்
பெருஞ்செலவில்;
தெருவெங்கும்
வண்ணச் சுவரொட்டிகளால்
கண்ணை மயக்குவோம்
வேண்டுமானால்
விண்ணில் பறக்க
வெள்ளை புறாக்களையும்
வீசிவிடுவோம்.
கேலிச்சித்திரங்களால்
சுலோக அட்டைகளை
தாங்கிப்பிடிப்போம்
மூலை முடுக்குகளில்
முழக்கமிடுவோம்.

வாருங்கள்!
சமாதானத்திற்காக
யுத்தம் செய்வோம்
சூரர்களின் கைகளில்
சுடுகலன்களைக் கொடுத்து
தலைமை ஏற்றிடுவோம்
காசுகள் சேர்ப்போம்
கருவிகள் வாங்குவோம்
தலைகளை அரிவோம்
வாய்களைத் தைப்போம்
மீறுவோரின்
நரம்புகள் உருவி
குழிகளில் புதைப்போம்.

வாருங்கள்!
சமாதானத்திற்காக
கைதுகள் செய்வோம்
சிறைகளில் வதைப்போம்
நையப்புடைக்கும்படி
பேய்களை
ஏவிவிடுவோம்.

நீதி தொலைந்து போகட்டும்
நியாயங்கள் கெட்டுப்போகட்டும்
நீர் நிலைகளில்
வயல் வெளிகளில்
பார்க்கும் இடங்களெல்லாம்
பயங்கரவாதம்
பச்சைக்கொடி காட்டட்டும் ;
நீங்கள் வாருங்கள்
சமாதானத்திற்காக
அல்லாவைத் தொழுவோம்




பரமபிதாவை
பிரார்த்திப்போம்.
சிவனையும்
சிந்தனை செய்வோம்
புத்தனையும்
பூப் போட்டுக் கும்பிடுவோம்
பயிர்களைப் பிடுங்குவோரின்
கஷ்டங்கள் தீர
தெய்வ ஆசி வேண்டி
பூசைகள் செய்வோம்.

வாருங்கள்!
சமாதானத்திற்காக
நியாயங்கள் வழி
தியாகங்களை
அசுரத்தனமாக்குவோம்
பொய்மைகளை
புனிதமாக்குவோம்
இனி,
அமைதி சமாதானம்
ஆட்சி நடத்தும்.

## சுகம்

சூரிய மின் குமிழ்கள்
பூத்திருக்கும் வானத்தில்
மேற்குறிப்போலொளிரும்
வெண்நிலவு தவழ்ந்துவர
காற்று விளையாடும் கடற்கரையின்
பட்டுமணல் கம்பளத்தில்
வானத்தைப் பார்த்தபடி
மல்லாந்து கிடக்கும் போது
மனதிலெழும் பரவசத்தை
வடிப்பதற்கு வார்த்தைகளோ!



## மக்களே திரண்டெழுக!

பார்க்கும் இடமெலாம்
சமாதானம்
கானல்சுடராக
கண்களை வருத்துகிறது
கேட்கும் ஒலியிலெல்லாம்
அமைதி
கூரிய கத்தியாய்
செவிகளைத் துளைக்கிறது.
நெஞ்சக்கலை மான்
அமைதி வேட்கையில்
கானல் சமாதானத்தை
நிஜமென்று
தேடி அலைகிறது.
ஊசியின் காதிற்குள்
ஊடகவியல்
ஒட்டகத்தை ஓட்டும் போது
நிழலின் மாயையே
நிஜமாக
நிமிர்ந்து நிற்கிறது.

இல்பொருளுக்கு
இருத்தலைகற்பிக்கும்
இருளின் இயக்கம்
இருத்தலுக்கு
நெருப்பைப் பற்றவைக்கிறது.

இந்த
நெருப்பை அணைப்பதற்கு
மின்னல் இடியாய்
யுக மழையாய்
மக்களே
திரண்டெழுக!





## கல்வாரிக்காக......



ஓ கிறிஸ்துவே!
என் தவிக்கும் இதயம்
உனக்குச் சமர்ப்பணம்.
ஓர் ஏரோதின்
அரசு கட்டிலுக்காய்
எத்தனை குழந்தைகள்
கொல்லப்பட்டார்கள்?

பிள்ளைகளை இழந்ததால்
இராமாவில் எழுந்த
இராக்கேலின் அழுகுரல்
இன்னமும் என் காதுகளில்
ஒலித்துக் கொண்டிருக்கிறது.



அரியாசனத்தில்
ஏரோத்துக்கு
அளவுகடந்த ஆசையாம்.

எல்லா இடங்களிலும்
ஏரோது தோன்றியுள்ளான்.
எங்கள் பிள்ளைகளை
எங்கே ஒளிப்பது
ஒரு கல்வாரிக்காக!

வழிகாட்டி - 1997


## நண்பனே
## கொஞ்சம் நில்!

ஒடுக்கப்பட்டோர்
உரிமை வாழ்வு பெற - நீ
எடுக்கப் போகும்
நடவடிக்கைகள் என்ன?
சிறைப்பட்டோர்
விடுதலை அடைய - நீ
நிறைவேற்றப் போகும்
கடமை என்ன?

உனது சிலுவையை - நீ
சுமந்து கொண்டு,
ஒடுக்கமான, கரடுமுரடான
பாதை வழியாக
துன்பப்படுபவர்களின்
நலன்களுக்கு உழைக்க
உன்னிடம்
தியாகம் உண்டா?

நீ நல்ல சமாரித்தானா?
அல்லது
பிரச்சனைக்கு
முகங்கொடுக்கப் பயந்து
நழுவிச்செல்லும்
பரிசேயர் பரம்பரையா?

ஏழைகளுக்கு - நீ
சொல்லப்போகும்
நற்செய்தி
எதுவாக இருக்கும்?



நண்பனே
இதையும் கேள்.....
நீ எந்தப் பக்கம்?
வலப் பக்கமா?
இடப் பக்கமா?
ஒடுக்கப் பட்டோர் பக்கமா?
ஒடுக்குவோர் பக்கமா?
வென்ற பக்கம் நின்று
நீதியைப் புறக்கணிக்கிறாயா?
பலமற்றவர் பக்கம் நின்று
நீதிக்கு குரல் கொடுக்கிறாயா?



குற்றத்தைச் சுட்டிக்காட்டி
சத்திய முழக்கமிட்டு
கொலைப்பட்ட அருளப்பனா?
பதவியைக் காக்க
நீதியை அடகுவைத்த
பிலாத்துவா?

நீ ஒரு கோலியாத்தா?
அவனை எதிர் நின்ற
சிறுவன் தாவீதா?

நீதியென்று
எதைக்கருதுகிறாய்?
நீதியை வேண்டி நிற்போர்க்கு
நீ சொல்லப் போகும்
நற்செய்தி என்ன?

நண்பனே
இவர்களைத் தெரியுமா?
உண்பர் உறங்குவர்


ஒன்றாய் இருப்பர்
சிரித்துப் பேசுவர்
அன்பாய் இருப்பர்
தருணம் வருகில்
காட்டியும் கொடுப்பர்?
கடவுளை கிறிஸ்துவை
துதிப்பர் புகழ்வர்
இலாபம் வரும்மெனில்
பெயேல் சேபூலையும்
விழுந்து வணங்குவர்?

மிக்கேல் தூதனுக்கு
பெருவிழா எடுப்பர்
லூசிபருக்கும்
மேடை அமைப்பர்.

விருந்து விழாக்களில்
முதன்மையை விரும்புவர்
ஊர் மன்றுகளிலே
பதவிக்கு மோதுவர்.

மூடரைத் தூண்டி
ஊரைக் குழப்புவர்
நற்செயல்களுக்கு
தடையாய் இருப்பர்.
உனது ஊரில்
நீ யார்?

வழிகாட்டி 1987




## விசாரணை

கிறிஸ்து நண்ப!
உனது
ஆடைகளை அபகரிக்க
திருவுளச் சீட்டுப் போட்டார்கள்.
விசாரணைக்காக
தேடப்படுவோர் பட்டியலில்
எனது பெயருக்கே
முதலில் சீட்டு விழுந்தது.

விசாரணையின் போது
துயிலெழுந்த கும்பகர்னர்களின்
துடுப்பு (கிறிக்கெட்) ஆட்டத்தில்,
வெறிபிடித்த வாலிகளின்
உதைபந்தாட்டத்தில்
கருணை அற்ற
* ஹஸ்யஸ் கிளேகனின்
கரப்பந்தாட்டத்தில்
பந்து ஆனேன்.

மரணத்தின்
காரணம் அறிவதற்கு
செய்யப்படுவது
'போஸ்மோட்டம்'
ஆனால்
வதையின் மைந்தர்கள்
எனது
தவறுகளை அறிவதற்கு
உயிருடன் என்னை
'போஸ்மோட்டம்' செய்தார்கள்.



நான்
முனகி,
மயங்கி,
வேர்த்து விறுவிறுக்க
எனது
நகக் கண்களில்
குண்டூசி ஏற்றினார்கள்.

வீட்டைத் துறந்து
நாட்டு விடுதலைக்கு
என்னை அர்ப்பணித்தது,
மக்களின் நலன்களுக்கு
எனது
இன்ப துன்பங்களை
கீழ்ப்படுத்தியது,
மனுதர்ம போராட்டங்களில்
முன்னின்று உழைத்தது
பொய் வேடங்கள் கலைய,
உண்மைகளை
மக்களுக்கு
அம்பலப்படுத்தியது.

இவைகளே
எனது
மனமறிந்த தவறுகளாகும்.



* முன்னாள், வெல்லப்படாத
உலக அதிபார குத்துச்சண்டைவீரன் முகம்மது.

வழிகாட்டி - 1987


## வடக்கு நோக்கி வரும் இரத்த மாகாவலி



தனக்குத் தானே
விரோதமாய் பிரிந்து போகும்
எந்த இராட்சியமும்,
எந்த வீடும்
நிலைத்து
நிற்க முடியாது.
கிறிஸ்து யேசுவே!
எனது குடும்பம்
அழிந்து போனது!
பாகப்பிரிவினையால்
எமது சகோதரர்கள்
மோதுண்டு அழிந்தார்கள்.

கூட்டுமாறு கூட்டும்
ஈர்க்கு என்ன செய்யும்?

பிணங்களை,
எலும்புக் கூடுகளைச் சுமந்து கொண்டு
ஓலமிடும் இரத்த மகாவலி
வடக்கு நோக்கி
வருகின்றது.




எமது எதிரி
எண்ணெய்க்குப்பதிலாய்
இரத்தத்தையும்,
உணவுக்குப் பதிலாய்
மனித தசையையும்
எமக்குப் பரிசாக்கினான்.

வரலாற்றுப் புத்தகத்தில்
ஒற்றுமைப் பக்கங்களை
கிழித்துக் கிழித்து ஒத்திகை பார்க்கும்
துரோகத்திற்கு
எமக்குக் கிடைக்கும்
பரிசா?

ஊர் இரண்டாகினால்
கூத்தாடிக்குக் கொண்டாட்டம் தான்!

வழிகாட்டி - 1987



## துணை

தென்றலுக்கே தாங்காத
மினிக்குடையின்
கவர்ச்சியிலே மனதைவிட்டு
இதுவரைக்கும்
தோள்தந்து
நிழல்தந்து
மழை தடுத்து
துணை நின்ற
ஒரு குடையை
கவர்ச்சியில்லை எனவிடுத்து
கடுமழையில தோய்ந்தபோது
கண்விழித்தேன்
கண்ணீர்ப்பூக்கள்!
வாழ்க்கைத் துணைதேடும்
கடுமையான படலத்தில்
கருத்தூன்றிக் கண் விழித்து
உற்றதுணை தேடவேண்டும்
ஏற்றமன ஒற்றுமைதான்
ஏற்புடையதாகுமன்றோ!

# உனது சுவடுகளில்

“தவறாக பேசியிருந்தால்
தவறை
எடுத்துக்காட்டு
உண்மையைப் பேசியிருந்தால்
என் கன்னத்தில்
ஏன் அறைந்தாய்?”
விசாரணை மன்றில்
கன்னத்தில் அறைபட்ட
கிறிஸ்துவின் கேள்வி.
“உண்மைக்குக் குரல் கொடுக்க
உலகில் பிறந்தேன்
உண்மையை நாடி
வாழும் எவனும்
என் குரலைக் கேட்கிறான்”
பிலாத்துவின் மன்றில்
கிறிஸ்துவின் விளக்கம்.

நேற்று நடந்த
ஒரு
பொதுக் கூட்டத்தில்
நான்
அதை அனுபவித்தேன்.
கேள்விக்காக
ஒதுக்கப்பட்ட நேரத்தில்
மெளனம் கலைத்த
எனது கேள்விகள்

“கேள்விகள் கேட்காதே”
பின்னால் யாரோ
என்னை அதட்டினான்
எனக்குப் பின்னால்
நடப்பதைச் சொல்லி
விளக்கம் கேட்டேன்.



அசடு வழிந்த
பேச்சாளன் முகத்தில்
கோபம் கோலம் போட்டது
கூட்டம் குலைந்தது.

அந்த இரவு சாமத்தின் பின்
வீட்டைச் சுற்றி
தடதடக்கும் சப்பாத்து ஓசைகள்
எனது நெஞ்சில் மெல்ல உதைத்தது.

கெஞ்சி அலறும்
அம்மா சகோதரிகளை
உதறி விட்டு
அவர்கள்
என்னைக் கொண்டு சென்றனர்.

மௌனம் எடுத்த முகங்களோடு
தத்தம் வீட்டுப் படலைகளில்
அயலவர்கள்.

அச்சம் தருகின்ற
அமைப்பில் ஓர் அறையில்
என்னைச் சுற்றி அவர்கள்
மூச்சு விடுவதற்குள்
கேள்விக்குப் பதில்
கேட்டுத்தந்தனர்.


பாட்டம் பாட்டமாய்
இடி உதைகள் பொழிந்தன.
ஓ கிறிஸ்துவே!
மனுவதையும், மரணமும்
உண்மையின் கல்லறைகளா?
எத்தனை காலம்
இந்தக் கல்லறைகள்



எழுந்து நிற்கும்?
மக்களின் மௌனம்
எப்போது புயலாகும்?

அந்த நாளில்
கல்லறையைப் கிளந்து கொண்டு
மானுடன் உயிர்த்தெழும்
மனுக்குலம் உயிர்த்தெழும்
அதற்காகவே
நான் சிலுவையில் அறைபட
உனது சுவடுகளில்
எனது
கால்கள் பதிக்கின்றேன்.

வழிகாட்டி - 1987



## நாங்கள்

நீதியே நீயாய்
நீயே நீதியாய் இருக்கிறாய்
ஓ, கிறிஸ்துவே!
நீயே அதுவாக
அதுவே
நீயாக இருக்கிறாய்.

உனக்காக
எங்களை
நீதிமன்றத்தில் கையளித்தார்கள்.
செபக் கூடங்களில் அடித்தார்கள்.
உன் பொருட்டு
ஆளுனர்களிடமும் அதிகாரிகளிடமும்
இழுத்துச் சென்றார்கள்.
சிறையில் தள்ளினார்கள்.
எங்களை

பட்டினி போட்டார்கள்.
எங்களை எள்ளி நகைத்தார்கள்
கொள்ளைக்காரர்கள் என்றும்
காமுகப் பேய்கள் என்றும்
பழி சுமத்தினார்கள்.
கன்னத்தில் அறைந்து
சிரிக்கப் பணித்தார்கள்.
பாட்டி கதை சொல்லும்படி
பணிந்து சிரித்தார்கள்.

பிறந்த மேனியாய்
குப்புறப் படுக்கவைத்து
தண்ணீர் ஊற்றி
மரச்சட்டத்தால்
எங்களை
பாளைதட்டினார்கள்.

எங்கள் கண்ணெதிரில்
எங்கள் நண்பர்களை
சுட்டுக் கொன்றார்கள்
எங்கள்
நண்பன் ஒருவனின்
முகத்திலுள்ள
அடர்ந்த தாடியின்
ஒரு பாகத்தை
"லைற்ரர்" கொண்டு எரித்தார்கள்.

எமது பெற்றோர் உடன் பிறந்தோர்
உறவினர்கள் நண்பர்கள்
எங்களை
காட்டிக் கொடுத்தார்கள்




உனது
பெயரைக் குறித்து
எம்மை
எல்லோரும் வெறுத்தார்கள்
நேற்றுவரை
எம்முடன் நின்றவர்கள்
எம்மைப் புறக்கணித்தார்கள் ;
எம்மை
துன்புறுத்துவோருடன்
கைகோத்துக் கொண்டார்கள்.

ஆயினும்
நாம்
நீதியைக் குறித்து
எப்பொழுதும்
பெருமை அடைகிறோம்.
அக்களித்து அகமகிழ்கிறோம்

ஒரு
புனிதமான
இலட்சிய உலகின்
புதல்வர்களாக
அபிஷேகம் செய்யப்பட்டோம்.
உண்மையில்
நாங்கள் பாக்கியவான்களே.

வழிகாட்டி - 1987



# ஜீவிதம்

கூடுகள் பிரிக்கப்பட்ட
காக்கைகள் கூட்டமாய்
இருக்கை தேடி
அலையும்
நாங்கள்
காகக் கூட்டில் பொரிக்கப்பட்ட
குயில் குஞ்சுகளை விடவும்
அகதி முகாங்களில்
அவலப்படுகிறோம்.
கூடுகட்டத் தெரியாது
கட்டிய கூட்டையே
பிரித்தெறியும்
குரங்கிற்கு
எமது
இருக்கைகளின் பெறுமதி
எப்படி விளங்கும்?

வான் பொய்ப்பினும்
குளங்குட்டைகளின்
வயிறுகள் வெடிப்பினும்
ஓடைகள்
வெண்மணல் கொளிப்புறும்
சுண்ணக்கற்பாறைகளில்
ஊறும் நீர்
உப்புக்கரிப்பினும்
பெற்றதாயினும்
பெரிய
பிறந்த மண்ணில்
எங்கள்
ஜீவிதம்
புதைந்து கிடப்பதை
நாங்கள் உணர்கிறோம்!




## ஏன்?

ஓ! பரோபகாரிகளே
நாங்கள்
உங்களிடம் கேட்பது
பாற் புட்டிகளையல்ல
கறவைகளைத்தான்
ஆனால்
நீங்களோ!
எஞ்சிய பாற் புட்டிகளையும்
சமுத்திரத்தில் கொட்டுகிறீர்களே!


யுத்தங்களை நிறுத்தும்படி
மெத்த இரந்தோம்.
நீங்களோ
எங்களுக்கு
போர்க்கருவிகளையல்லவா
விற்பனை செய்கிறீர்கள்?

நீங்கள்
எங்களுக்கு
விற்பனை செய்த
போர்க்கருவிகள்
அகதிமுகாம்களில்
எங்களுக்கு
வாய்க்கரிசி போடுகின்றன
காப்பணமும்
முழத்துண்டும்
கிடைக்கவே செய்கிறது.
ஓ! பரோபகாரிகளே
அப்பத்தைக் கேட்டால்
ஏன்
சர்ப்பத்தைத் தருகிறீர்கள்?



# விளைவு

ஏ!
வள்ளுவன் போற்றிய
தந்திரக்காகமே
செல்வச் சீமானின்
வெள்ளித்தட்டிலுள்ள
அர்ச்சனைப் பண்டங்களை
தட்டிப்பறித்த
நீ,
பருக்கைகள் சேர்த்து
பசியாறும்
பிச்சைக்காரன்
எனது
சோற்றுச் சரையையுமல்லவா
தட்டிப் பறிக்கிறாய்?
பகிர்ந்துண்டு வாழ்வதற்கு
எடுத்துக்காட்டான
தந்திரக்காகமே!
வலியவர்தமையும்
மெலியவர்தமையும்
இனங்கண்டு கொள்ள
இதயமில்லாத
உனக்கு
எனது
மனக்குமுறல்
எப்படி விளங்கும்?
ஓ!
தட்டித்தின்னியே
நீ
தட்டிபபறித்த
வடை
நரியின்
வாயிலிருக்குமென்று
கனவுகண்டிருப்பாயா?




## நாளை

இன்னும்
எவ்வளவுகாலம்
எத்தனை
ஜெத்சமெனிகள்
வரலாற்றை எழுதும்?
இனிமேலும்
கொலைபாதக
பரபாசையா
யூதர்கள்
விடுதலை செய்ய
கோருவர்?

எந்தப் பிலாத்து
எதிர்காலத்தில்
நீதிமானை
விடுதலை செய்யும்படி
தீர்ப்பிடுவான்?

நாளைக்கு
எத்தனை பேருக்கு
பெரிய வியாழன்?
நாளை மறுதினம்
இன்னும்
எத்தனை பேருக்கு
பெரிய வெள்ளி?
நாளை
உயிர்ப்புக்காக
தகர்க்கப்படாத
கல்லறைகளாகவா
வாழ்க்கை இருக்கும்
நாளை
இந்த வரலாற்றில்
நீ?



## உயிர்ப்பு



அடிமை நுகத்தடியின் கீழ்
எங்கள்
ஆன்மாவைப் பறிகொடுத்தோம்
வறுமை சுமைநெரித்ததால்
வெறுமை நெருப்பிற்குள்
துடிக்கும் புழுவானோம்.

அணுஅணுவாய்
எங்கள்
வீட்டுவேலியை வெட்டிய
அயல் வீட்டுக்காரன்
சமாதானப் புறாக்களை
இருண்ட வானில் பறக்கவிட்டபடி
நமது
கூரையிலும் கைவைத்தபோது
திசையெங்கும்
எங்கள்
முகங்கள் திரிந்தன
முகவரிகள் சிதைந்தன
எங்கள்
அடையாள அட்டைகளையும்
நாங்கள் இழந்தோம்.
சோகமணம் வீசும்
எங்கள்
கண்ணீர்ப் பூக்களில்
மாலை கோத்து
தம்மை
அழகு பார்ப்பவர்கள்
எம்மை
எள்ளி நகைக்கிறார்கள்.

விலங்கிடப்பட்டோம்
மௌனித்தோம்
இருளில் தள்ளி
இடறு கட்டைகளில்
நடக்கும்படி
பணிக்கப்படுகிறோம்
மூச்சையும்
முத்திரைக்கே பெறுகிறோம்.



எங்கள்
முனகலே
அவர்கள் செவிகளில்
இடியாய் அதிருமெனில்
அவர்கள்
நெருப்பிலா நடக்கிறார்கள்?

காய்ந்த கட்டாந் தரையிலே
மேகமழைத் துளிகளின்
மோக முத்தங்களால்
உருவாகி அசைகின்ற
மண்புழுவைப் போல
காலக் கருணை மழை
ஞால மேடையில்
கோலக்கூத்தாடும் வேளை
மனத்தரைக்குள்
புதைந்திருக்கும்
எங்கள்
நம்பிக்கை அறுகம்வேர்
ஆல்போல் துளிர்விடும்;
அப்போது
மரணத்திற்கொப்பான
சமூகக் கொடுமைகளிலிருந்து
நீதிவழிமுயன்று
நாங்கள்
உயிர் பெறுவோம்.




## கவனம்

நண்பனே
காதைக் கொடு
கவனம்
உனது சேட்.


எனக்கு தெரியும்
வானத்தில்
ஒரு நிலவுபோல
உனக்கு
அந்தச்சேட்.


தற்காலிகமாக
நீ
குந்தியிருக்கும் கதிரையில்
மற்றவர்கள்
இருந்து விடுவார்களோ
என்ற
அச்சத்தினாலா
உனது
அந்த
ஒரு சேட்டையும்
கதிரையில்
தொங்கவிட்டிருக்கிறாய்?
நண்பனே
நீ
இழக்கப்போவது
உனது
கதிரையைமட்டுமல்ல
சேட்டையுந்தான்.



# யுகங்களின் தலைவனே

அலுவலக அறைகூட
சாம்ராட்சியக் கனவால்
சகதியாகி விட்டது.
எழுத்தறியா
ஏமாளிச் சுப்பனும்
கதிரைக் கனவால்
களத்தில் குதிக்க
காத்திருப்பதைப் பார்க்க
அப்பா!
யேசு பெருமானே
எப்போதும்
உனது நினைவே
என்னை
தப்பாமல் தீண்டுகிறது.
பாலை வனத்தில்
பசித்த வயிற்றோடு
கடுந்தவமிருந்த
உன்னை
குண்டுக்கட்டாய் தூக்கிய
மனுக்குலப் பகைவன்
சாத்தான்
குன்றின் உச்சியில்
கொண்டு போய்
வைத்தது.
நீ
நிமிர்ந்து நின்று
திசைகள் தோறும்
தொலை தூரம்
சுற்றிப் பார்த்தாய்





இராட்சியம் அனைத்தும்
உனது காலடிகளில்
உன்னைப் பார்த்து
புன்னகைத்தன.
"நீர்
எனது
காலடிகளில்
வீழ்ந்து வணங்கினால்
இந்த
இராட்சியம் அனைத்தும்
உமக்கே தருவேன்
உறுதியென்றது."
சாத்தான் சொன்ன
வார்த்தையின்
அலைகள் ஓயமுன்
மின்னல் போல
உனது பதிலடி
சாத்தானுக்கு
'சாத்தானே
நீ
அப்பால் போய்விடு
கடவுளை மட்டும்
வணங்கிடல் முறைமை'
உனது வார்த்தையின்
மின்னல் சாட்டையில்
புன்முகம் சிதைந்த
பொல்லாச் சாத்தான்
உன் முகச் சோதி
கண்களை உறுத்த
தன்கெடு மதிகெட
இருளில் மறைந்தது.
இராச்சியம் அனைத்தின்



மனக் கண் திறக்க
தாழ்மை என்னும்
தூய நெறியினை
முடியாய்ப் புனைந்த
யுகங்களின் தலைவனே
பணிந்தேன்
உனது
மனக்கறை போக்கும்
பொற்பாதம்.

## நீ மீண்டும் வரவேண்டும்

அது
ஒரு
கனத்த இரவு:
நீ
வாழ்வைப் பலிகொடுத்து
வாழ்வுகொடுக்க
வதைபடத் துணிந்த
உரத்த இரவு.


சின்ன மனிதரின்
சூர நினைவுகள்
கூரிய அம்புகளாய்
உன்மேல் பொழிய
நீ மட்டும்
நிதானமாக
உன்னவர்களுடன்
அந்த
இறுதிவிருந்தில்.....




உனது
பாடுகள்
மரணம்பற்றியும்
பற்பல சொல்லி
துயர்மிக அடைந்தாய்.

கடலோரம் கிடந்த
கூழாங்கற்களை
ஒவ்வொன்றாய்ப் பொறுக்கி
பவளக்கற்களாய்
பட்டைத் தீட்டி
ஞான ஒளி
வீசும்படிக்கு
வாழ்வின் தடங்களில்
வைத்து மகிழ்ந்த
வையத்துவிளக்கே!
சோகம் சுமந்திருக்கும்
அந்த
பிரியாவிடையின் போது
உனது
திருமுன்னுமா
பதவி ஆசை என்னும்
நச்சுப்பாம்பு
உன்னவர்களின்
சிந்தையைத் தீண்டும்?

உனக்கோ
நாளைய
மரணக்கலக்கம்
உன்னவர்களோ
நாளை மறுதினம்
யார் பெரியவன்
யாருக்குப் பதவி
என்று கலகம்.



சாட்டைகளால்
கடித்துக்குதறப்பட்டு
இரத்தப் பால்வடிந்த
விண்ணக விருட்சமே!




சிந்தைநொந்து
நெஞ்சு பொறுக்காது
நெருப்பான
சோகத்தை நெட்டுமிர்ந்து
முத்து முத்தாக
நீ
கொட்டிய வார்த்தைகளில்
பட்டமரமும்
தளிர்விடும்.

பணிவை
தலைமைக்கு இலக்கணமாய்
பரிந்துரைத்து
பிறர்க்கு
பணிசெய்து கிடப்பவனே
தலைவன் எனச் சாற்ற
சீடர் பாதங்களை
கழுவி
முத்தமிட்டு
அன்பைச் சொரிந்த
அண்ணல் பெருந்தகையே!
உன்னைப்போல்
ஒரு தலைமைக்காக
விண்ணைப் பார்த்தபடி
நெஞ்சு பிரார்த்திக்கிறது;
இங்கு
நீ
மீண்டும் வரவேண்டும்.



# என் அழுகைகள்....



எப்படியோ
மனிதன் கையில்
மாட்டிக் கொண்டு
தவிக்கும்
ஒரு
தேவாங்கு போல
நானும்
சம கால நிகழ்வுகளுக்குள்
மாட்டிக் கொண்டு
அழுது வடிகின்றேன்.

அழுவதை தவிர
வேறு
எதுவுமே செய்யமுடியாது
என்ற
எனது
இயலாமைக்காகவும்
அழுவதைத் தவிர
வேறு
எதுவுமே செய்யமுடியாது
அழுது வடிகின்றேன்.

நான்
மனிதத்தை
நேசிக்கிறேனாம்
அதனால்தான்
சமகால நிகழ்வுகள்
என்னை
அழுமூஞ்சியாக்கி விட்டதோ?

வடபுலத்து வானம்
முகிற் கூட்டங்களை
விழுங்கி விட்டு
சூரியராஷ்சதனுக்கு
பச்சைக்கொடி காட்டி விட்டதோ?
புலுட்டும்
மண்ணில்
துடிக்கும் புழுவாக
மக்கள் ;
நான் மட்டும்
மூன்று வேளையும்
வயிற்றுத் தேவதைக்கு
பலி செலுத்திவிட்டு
இடைக்கிடை
மஸ்துத் திராவகத்தை
மனம் குளிர மண்டி விட்டு
சோகம் தாளாமல்
அழுது வடிகின்றேன்.




எனது
கதிரைக் கனவுக்கு
கலக்கம் வரும் போது
எதிர் திசையிலிருந்து
எழுந்து வரும்
நன்மையைக் கூட
ஜீரணிக்க முடியாமல்
வேண்டாத மனைவிமேல்
எரிந்து விழும்
கணவனைப் போல
நானும்
நச்சரிக்கின்றேன்.
இருந்தும்

மனிதன் செத்துவிட்டதாக
இன்னும்
அழுது வடிகின்றேன்.

வலது கைப்பெருவிரல்
வெட்டப்பட்டு
ஏகலைவன்
வஞ்சிக்கப்பட்ட போது
மொட்டை மரம் போல்
மெளனித்துப்போன
நான்
இன்னமும்
மனிதத்துக்காகவே
அழுது வடிகின்றேன்.
எதிரிக்கு
சகுனப்பிழையாக்க
எனது மூக்கையே
அறுக்க துணியும்
எனக்குள்ள
இயல்பாதங்கம்,
வென்ற பக்கத்திற்கு
பிருஷ்ட மரக்கும்
எனக்குள்ள
கஞ்சத்தனம் ;
ஏனோ
மனிதம்
தொலைந்து விட்டதாக
அழுது வடிகின்றேன்.

மக்கள் படும்
அவலங்களைப்பற்றி



எப்பவும்
எமக்கு
மிகுந்த கவலைதான்

அதனால்தான்
விரலால் தானும்
தொட்டுப் பார்க்காத
பாரச் சுமையை
மக்கள்
தோள்களின் மேல்
சுமத்திவிட்டிருக்கின்றேன்.
ஆயினும்
மனிதத்துக்காக
அழுது வடிகின்றேன்.

கொன்று போடுவது மட்டும்
பாவம்
என்பது
சித்தாந்தம்;
கொன்றதை
தின்பதோ
வாழ்வின்
தவிர்க்க முடியாத
நிஜம்
இது
எமது
நடைமுறை,
என்னவோ
மனிதம்
தொலைந்து போனதாக




ஓர்
இனம்புரியாத
வருத்தம்;
இவை தாம்
என்னினுள்ள
நான்.

## தோற்கடிப்பு



நண்பனே
யூதாஸ்!
நாங்கள்
உன்னை
தோற்கடித்து விட்டோம்!
நண்பனை காட்டிக் கொடுத்த
பெரும்பிழைக்காக
உந்தன்
உயிரையும்
நீ துறந்தாய்!
ஆனால்
எங்கள் இருத்தலோ
காட்டிக்கொடுப்பானது!


## நிகழ்வுகளின்...



வானம்
சிவந்திருக்கும் போது
வானமே
சிவப்பென்றாகுமோ?

பனைக்குக்கீழிருந்ததினால்
கள் குடித்தான் என்பதோ?


நிகழ்வுகள் தோற்றங்களை
நீ கண்டு மயங்காதே!
நிகழ்வுகள் உன்மேல்
ஆதிக்கம் செலுத்துமெனில்
கயிறும்
பாம்பாய்த் தெரியுமன்றோ!



தோற்றங்கள் நிகழ்வுகளின்
பின்புலத்தில்
அவைகளின்
எதிர்மறைகள் ஒளித்திருக்கும்

எனவேதான்
நண்பனே!
தோற்றங்களின் நிகழ்வுகளின்
பின் புலத்தின்மேல்
அறிவைச் செலுத்து
உண்மை வெளிவரும்.


## உண்ணிகள்



தெருத்தெருவாய்
அலையும்
ஒரு
குட்டை நாயில்
ஓர் உண்ணி
ஒட்டியிருந்தது.

அன்பும் பாசமும்
நகமும் தசையுமாய்

ஓட்டியுள்ளதினாலே
குட்டை நாயுடன்
ஓட்டியுள்ளதாய்
உண்ணி சொன்னது.




ஒரு நாள்
அந்தக் குட்டைநாய்
சாலை யோரத்தில்
செத்துக்கிடந்தது
ஈக்கள் மட்டும்
அழுது சிணுங்கின
உண்ணி இருந்த
இடந்தானும் இல்லை.




மனிதரில் உண்ணி உண்டு
மனிதரில் நாயும் உண்டு
வாழ்க்கைக் களத்தின்
ஒவ்வொரு அலகிலும்
உண்ணிகள் போலும்
மனிதர் இருப்பர்
விழியைக்கொஞ்சம்
திறந்துபாரும்.

## எப்படி அழைப்பது?



ஓ!
எல்லாம் வல்லவனே
உனக்கு
புல்லும் ஆயுதந்தான்
போற்றிப் பரணியை
உனக்காகப் பாடுவேன்.
ஆனால்

நீருக்குள்
நெருப்பைக் கொண்டு செல்லும்
உனது
வல்லமையால்
மீன்கள் அல்லவா
செத்து மடிகின்றன?
தோலிருக்க
சுளைதின்னக் கூடிய
நீ
சுளையை விட்டு விட்டு
தோலை மட்டும்
கௌவ்விக் கொண்டதென்ன?




ஈனவும் விடாமல்
மேயவும் விடாமல்
இடறி விழுத்தும்
உனது
வல்லவத்தின்மேல்
சாதுவும் சினக்கும்போது
அதனை
பாதகன் என்பாயாகில்
உன்னை மட்டும்
எப்படி அழைப்பது?

## மௌனம்



நீர்க் குமிழிபோல் உடலினுள்
ஒளிந்திருக்கும்
உயிர்காற்றையும்
பணயம் வைத்து
கொள்ளையடிக்கப்பட்டது.

கொள்ளையடிப்பித்த
சிலர்
குபேரர்களாய்
கோபுரத்தில் குடியிருக்க,
கொள்ளையடித்தவர்களோ
கோவண ஆண்டிகளாய்
குப்பை மேட்டில்
குடியிருக்கிறார்கள்
சிலர்
ஊனமுற்று
உருக்குலைகிறார்கள்.



இருப்பினும்
கொள்ளையடிப்பித்த
கோமான்களுக்குள்
கொள்ளைப் பொருளில்
பங்கீட்டுப் பிரச்சனை ;
மனதில் விசனம்
உறவில்
விரிசல்
நெஞ்சுக்குள் எரிமலைகள்.


எனினும்
ஒருவரை ஒருவர்
காட்டிக் கொடுக்காமல்
திட்டித் தீர்க்காமல்
மோதிக் கொள்ளாமல்
மௌனம் போர்த்து
காத்திருக்கிறார்கள்
கண்ணி வெடிகளை
புதைத்து விட்டு.



# அராஜகம்

காற்று
உறிஞ்சப்பட்டதால்
மூச்சுத்திணறுகிறது
வாயைத்திறந்து
நாக்கை வெளிநீட்டி
வீணீர்சொட்ட
நாய் கூட இளைக்கிறது.

சித்திரத்தைப் போன்று
மௌனம் போர்த்தியிருக்கும்
மரஞ்செடி கொடிகள்
படைபடையாய்
துண்டுதுண்டாய்
வெடித்துக் கிடக்கின்ற
குளங் குட்டைகளின்
அடிவயிறுகள்
சுடுமணல் கொளிக்கும்
சல சல ஓடைகள்.



கருகிக் கிடக்கும்
வயல் வெளிகள்
மஞ்சள் வெளுப்பேறி
உருகிய சோலைகள்.
இலைகளை உதிர்த்து விட்டு
வெற்றுக் கொம்புகளோடு
இறுகிப்போய் நிற்கும்
பாரிய மரங்கள்.

கானல் மழைபொழிந்து
தார் வீதி சேறாக்கும்

கோடையின் அராஜகம் ;
கானினங்கள் முகாரி பாடி
இந்தக் கானலைத்தானே
நீரெனத் தேடுகின்றன?

## எத்தனை காலம்?

புலும்படும் மணலில்
மந்தைகளை மேயவிட்டு
கானலைத் தண்ணீர் காட்டி
ஏய்த்துப் பிழைக்கும்
மேய்ப்பர்கள்.




மன வயலில்
அமைதிப்பயிரை
துவஷம் செய்யும்
மதவெறி யானைகள்.

பசிக்கிற தென்று
வாயசைக்கும் போது
பாம்பைக் கொத்தவிடும்
பரோபகாரிகள்.

எத்தனை காலம்
இந்தப் பொய் மேகங்கள்
உண்மை நிலவை
மறைக்க முடியும்?


## அறிவீரோ?

ஓ!
வானுயர்ந்த வன்மரங்காள்
உங்கள் நிழல்கள் தேடி
ஆறவென ஓடிவரும்
அப்பாவி விலங்குகளை
உங்கள் நிழல்களன்றோ
சுட்டுப் பொசுக்கிறது?
வலிமைக்கிளைகள் தாம்
வதைத்து எடுக்கின்றன.




நெஞ்சில் ஈரமில்லார்
கொத்தித் தறிப்பதற்கு
கோடரிக் காம்புகளாய்
நின்று துணைபுரியும்
வானுயர்ந்த வன்மரங்காள்!

மனிதத்தை நேசிக்க
மனிதனுக்குத்தான் தெரியும்
மரங்கள் நீவீர் அறிவீரோ?



வானும் இடிவிழுத்தும்
மழையும் தீயாகும்
காற்றும் சினந்தடிக்கும்
தோற்படையை பூச்சி தின்னும்
தன்வினை தன்னைச் சுடும்
இயக்கமுள்ள தத்துவத்தை
மரங்கள் அறிவீரோ?

## நண்பரைப் போல் நடிப்பவர்கள்



போடுமட்டும் போட்டுக் கழித்தபின்
வீசப்பட்ட செட்டுப் போல்
வீசப்பட்ட நண்பனே!
ஒடிந்து சிதைந்து ஊனமாய்
விழுந்து கிடக்கின்ற ஏணிபோல்
விழுந்து கிடக்கின்ற நண்பனே!

மெல்ல விழி திறந்து மேலே
இருப்பவரைப் பார் அவர்கள்
நேற்றுவரை உன்னுடனே
நண்பரைப் போல் நடித்தவர்கள்.

புலுட்டும் மணலில் நடப்பதற்கு
தெருக்கள் தோறும் காலறுத்த
செருப்புக்கள் தேடித் தைத்து
பாவிக்கத் தெரிந்த வல்லோர்.

சுயநலச் சந்தையிலே அன்பை
தயக்கமின்றி ஏலம் போட்டவர்கள்

போலி முகங்காட்டிப் புன்னகைத்து
விருந்து கொடுக்கும் நெஞ்சர்.
வருந்தும் மனிதனுக்கு மருந்துக்கும்
உதவாக் கஞ்சர் அன்றோ
நண்பரைப் போல் நடிக்கிறார்கள்.

# நன்றி எசமானே

எந்தன் எசமானே
ஜீவராசிகளை நேசிப்பதில்
மனுநீதிச் சோழனையும்
தோற்கடித்தவர்
நீர்.

முட்டாள்தனமாக
முல்லைக்குத் தேரீந்து
புகழ் முடியணிந்த
வள்ளல் பாரியிலும்
நீர்
விவேகி,
ஏனெனில்
நீர்
முல்லைக்கு
கறிமுருங்கையையல்லவா
நட்டுவைத்திருப்பீர்



கொடும் புலியையும்
பிள்ளை போல் வளர்க்கும்
உமது
ஜீவகாருண்யம்
எத்துணை பெரியது!

தினமும் இறைச்சி
நோய்க்கு மருந்து
அடிக்கடி குளிப்பாட்டு
பாதுகாப்பான
இரும்புக்கூடு
புலிக்குட்டிக்கு
கொண்டாட்டந்தான்.

நாளொரு மேனி
பொழுதொரு வண்ணம்
வளரும் புலிக்குட்டியை
பார்த்து ரசித்த பரபரப்பில்
பூத்த உம்
புன்னகையில்
எத்தனை கனிவு?

ஆனால்
உமது
உண்மை ஊழியன்
எனது
வீட்டின் கூரை
ஆயிரம் கண்கள்
விழித்தன போல
ஓட்டைகளானது.

கடந்த இரவு
கனத்த மழையில்
நானும் எனது
உடன்பிறப்புக்களும்
நனைந்த சுகத்தை
சொல்லி அழுது
உம்மிடம் இரந்தேன்
உதவும்படி.
என்ன செய்வேன்
பச்சை மரமென்று
வெட்டிப்பார்த்தேன்
பால்வடியாத
உனது மனம்
முகத்தைத் சுழித்தது
நன்றி எசமானே
போதும்!




## பாவ ஒப்புதல்



நான்
அபகீர்த்திக்கு
ஒரு
மணிமுடி
எனது பெயர்
ஏரோதன்.

உரோமை
ஏகாதிபத்தியத்தின்
பிரமாணிக்கமுள்ள
ஒரு
சிற்றரசனாக
பலஸ்தீனத்தின்
ஒரு பகுதியில்
கொடுங்கோல்
புரிந்தவன்.
எனது
அரியாசனத்தை
தக்க வைப்பதில்
பரிவைக் கொன்றவன்.



உடன் பிறந்தவன்
மனை கவர்ந்து
பழி சுமந்தவன்
பிழையுணர்த்த
மனந்துணிந்தவனின்
சிரம் அறுத்தவன்.

எனது உயிரை
அரியாசனத்தை

பறிப்பதற்கு
குழந்தை ஒன்று
பெத்தலே கெமில்
பிறந்த தென்று
பறந்து வந்தது
செய்தி ஒன்று.

ஆணை பிறந்தது
கருணை இறந்தது
குருதி சொரிந்தது
இரு வயதிற்குள்
ஆண் குழந்தைகளின்
சிரசுகள் மிதந்தன.
குயிலின் கீதமாய்
ஒப்பாரி இனித்தது
நறுமலர் போல
பச்சை இரத்த
நெடி இருந்தது.
வாழ்வு முழுவதும்
வசந்தம் என்று
வண்ணக் கனவில்
விண்ணில் மிதந்தேன்
கிண்ணம் சுவைத்தேன்
வண்ண விழிகளின்
எண்ணம் அளந்தேன்.

அரிப்பெடுத்தது
ஊன் வடிந்தது
உடல் தளர்ந்தது
பூப்படுக்கையில்
புழு நெளிந்தது.



தேன் கனவுகள்
தான் மறைந்தன.
தேள் கடித்தது போல.

என் வினை
என்னை வந்து
சுட்டது சுட்டபோது
பட்டது பிழை எனக்கு
ஆணவம் அகந்தை என்ற
பேதமை விளைவி தென்று?

தெய்வமே பொறுத்திடுக
மெய்மையே பொறுத்திடுக
அழுக்கினில் வீழ்ந்து போன
ஈயெனக் கிரங்கி நீயும்
பெரும்பிழை
பொறுத்தருள்க
தேனென இனிக்குமுந்தன்
நினைவுகள் வாழ்வளிக்கும்
வள்ளலே வணங்குகிறேன்.



## மடைமை

நான்
கண்மூடி இருந்தபோது
பகலாய் இருந்தது
கண் விழித்துப் பார்த்தபோது
இருட்டாயிருந்தது
மடைமை
என்னை
சிறுமை செய்தது.



## ஆடு பாம்பே!



புற்றுக்குள்
சுகங்கண்ட நாகப்பா
பெட்டிக்குள்
உனக்கு
என்ன வேலை?

பசுவின் பாலும்
கோழி முட்டையும்
பெட்டிச் சிம்மாசனமும்
உன்
புத்தியைக் குழப்பிவிட்டதாலா
தேசியத்தை விலை பேசினாய்?

யாரை ஏமாற்ற
படம் விரித்தபடி
குறவனின் மகுடியை
கொத்திக்காட்டுகிறாய்?
நக்குண்டதால்
நாக்கை இழந்துவிட்ட
நீ
பல்லுப் பிடுங்கப்பட்டதால்
சொல்வன்மையையும்
இழந்தாயே!

நாளையும்
உனது இனத்தவனை
குறவன் பிடிப்பான்
பல்லைப் பிடுங்குவான்
பாலும் முட்டையும்
பெட்டிச்சிம்மாசனமும்
கொடுத்து மயக்குவான்

உன்னை
ஆட்டுவிப்பதால்
குறவனுக்கு
கொள்ளை இலாபந்தான்

ஆடு பாம்பே
சுழன்று ஆடுபாம்பே
உன்
தேசியம் அழிந்ததனால்
உன்
தேவைகள் கனிந்ததென்று
ஆடுபாம்பே
சுழன்று ஆடுபாம்பே



## ஆனந்தத் துளிகள்

அறிந்தும்
பாகனையே கொல்லும்
யானையின்
நன்றி கெட்டதனத்திலும்
குன்றென உயர்ந்த
நன்றி கெட்ட தனத்தின் மேல்
நெஞ்சு பொறுக்கமுடியாமல்
மனம்
ஒருவனைச் சபித்ததை
சபித்தவனே
சகிக்க முடியாமல்
மனதுருகி இரங்கியபோது
மனிதத்தின் கண்களில்
ஆனந்த நீர்த்துளிகள்
முத்தாக உதிர்ந்தன.




## யாருக்கு தெரியும்?

பாலையிலே
ஒரு
பசும் பூங்கா
பார்ப்பவர் விழிகளில்
பரவசம்தான்.

பாலையிலே
ஒரு
பகல் கனவா
என
விழி வியக்கும்
வாய் திறக்கும்
மூடுவதை அவை
தாம் மறக்கும்.

எல்லோருடைய
பேச்சிலும் மூச்சிலும்
நினைவிலும் கனவிலும்
நிறைந்து போன
பசும் பூங்கா!

பாலையில்
கோடையின்
கொடுங்கோலை
மறந்திடச் செய்யும்
பசும் பூங்கா
வேர்களுக்கடியில்
பிணக்குவியல்
யாருக்குத்தெரியும்
வரலாறு?




# காத்தல்

இயற்கையேன் கலங்குகின்றாள் .
இதயமுள்ளமானிடனே
இதையும் நீ கேள்.
கள்ள மரம் வெட்டிவந்து
கைநிறையக் காசு சேர்க்கும்
கண்கெட்ட கபோதிகளே!
இயற்கை அன்னை ஊனமுற்று
இயல்பியக்கம்
குன்றுவதை
இன்னுமா நீர் உணரவில்லை?
எதிர்கால இருத்தலினை
அழிக்கின்ற பாவிகளே
மழை பொய்த்தால் உமக்கென்ன
கண்டபடி காடழித்து
கள்ளமரம் வெட்டும் வேட்டும்.

எரிபொருட்கள் புகை முகிலாய்
வான்பரப்பை மாசுறுத்தும்
அணுக்குண்டுச் சோதனைகள்
பஞ்ச பூதங்களை வருத்தும்
ஓசோன் அச்சுறுத்தல்
ஓகோ ஓகோதான்.

நிகழ்காலப் பேய்க்கணங்காள்
சூழல் மாசடைந்தால்
உம்வயிற்றிலா அடிக்கும்?
நிகழ்காலந்தான் உமக்கு
விதியென்று வகுத்தவரே
எதிர்காலம் என்னவாகும்?
படைப்பையே அழித்தழித்து



அழிவையே படைக்கின்ற
அறிவியலின் அராஜகமே
"காத்தல்" படைப்பைவிட
காலத்தின் தேவையன்றோ
கருத்திலே கொள்மின்! கொள்மின்!



## புலம்பல்



மீன்கள்பாட
வாவி மகள் ஆட
வண்டினங்கள் சுருதி செய்ய
தவளைகள் முழவு கொட்ட
பறவைகளும் சேர்ந்து பாட
தென்றலெனும் மென்மடந்தை
சாமரத்தை வீசிநிற்க
பகலிலே கதிரவனும்
இரவிலே வெண்ணிலவும்
மாறிமாறி வெளிச்சம் காட்ட
இருள் திரையிழுத்து
இடைவேளைக் கிடங்கொடுக்க.
செந்நெல் தலைசாய்த்து
பூமகளைக் கொஞ்சி
விளைச்சலை அறிவிக்க
மரமுந்திரிகைச்செடி
பாற்சுவை பருப்புத்தர
ஆநிரைகள் மடி சொரிய
தேன்கூட்டின் வதை சொட்ட
தென்னம் குமரியர்தம்
இளநீர் குலைத்தனங்கள்

குலுங்கிடவே தலையசைக்க
அதனைக்கண்டு பொறுக்காத
நெட்டைக்கறுப்பழகார்
கற்பகக் கன்னியர்கள்
போட்டிக்குத் தலையசைக்க
மரங்களெல்லாம் தம் கரங்கள்
கொட்டிக் கலையாட
வண்ணவண்ணப் பூச்செடிகள்
கண்ணைக் கண்ணைக் காட்ட
தேன்கவிதைச் சரம் தொடுக்கும்
நற்கவிகள் உனைப்போற்ற
கொலுவிருந்த திருமாதே
மட்டுநகர் மங்காய்!

கடுங்கோடைக் கொடுங்கோலால்
பெருவெள்ளப் பாய்ச்சலினால்
சூறாவழி சீற்றத்தால்
திருவிழந்து போயினையோ?
புன்னகை மன்னவளே!
விருந்தோம்பல் அறங்கண்ட
உன் மக்கள் நிலை கண்டு
பொலிவிழந்து போயினையோ?
மென்மகளே வன்மனத்தோர்
பூவிழக்கச் செய்தனரோ?
பொலிவிழக்கச் செய்தனரோ?


போதாக் குறைக்கு
பொட்டிழக்கச் செய்வதற்கும்
கசாப்புக் கடைக்காரர்
கூட்டாழியாகினரோ?




# மரணத்தின் முன்பு

இயேசுவே
தாவீதின் குமாரனே
ஆவி சோரும் எங்கள் மேல்
இரக்கமாயிரும்
இயலுமாகில்
இந்தச் சுமையும் நுகத்தடியும்
எம்மை விட்டு அகலக்கடவது.
நாள் முழுவதும்
சுமந்து களைத்த கழுதை போலவும்
உழுது இழைத்த எருது போலவும்
நாங்கள் சோர்ந்து போனோம்.
இருப்பினும்
எம்முடைய எசமானர்கள்
எம்மை விட்டு விடுவதாயில்லை
நாங்கள் நிலத்தில் வீழ்ந்தபோதும்
எங்களை எழுந்து நடக்கும்படி
எங்கள் எசமானர்கள்
போட்டி போட்டுக் கொண்டு
எங்களைத் துன்புறுத்துகிறார்கள்.

வருந்திச் சுமை சுமப்பவர்களே
வாருங்கள் நம்மிடமென்று
வாக்களித்த வள்ளல் பெருந்தகையே
இதோ, எங்கள் சுமை
இதோ, எங்கள் நுகத்தடி
இவைகளோடு
எங்கள் கண்ணீரையும்
உமக்குக் காணிக்கையாக்குகிறோம்.
ஏந்திய கைகளும்
நோக்கிய எமது விழிகளும்
உம்மை இரக்கின்றன.



இது வரைக்கும் இனம் காணப்படாமலும்
தொட்டு அனுபவியாமலும்
தடுத்து வைக்கப்பட்டிருக்கும்
உமது எளிய சுமையையும்
உமது இனிய நுகத்தடியையும்
எங்களுக்கு இன்று தாரும்
எங்கள் மரணத்தின் முன்பு
உது இரக்கப் பெருக்கம்
எங்கள் மேல்
பொழியப்படுவதாக.



## பேதமை

ஒரு வகுப்பு மாணவரில்
ஒருவனையே அறிந்து விட்டு
வகுப்பிலுள்ள மாணவர்கள்
அனைவருமே அப்படித்தான்
என்றுரைத்தல் பேதமையே
ஒரு பானை சோற்றுக்குள்
ஒரு சோறு பதமென்ற
தத்துவத்தை எடுத்துரைக்கும்
சந்தர்ப்பம் தெரியாத
மேதைகளும் உள்ளனரோ?
சட்டத்திற்கும் உயிருக்கும்
வேற்றுமையைக் கண்டுணர்ந்து
ஏற்றதோர் பழமொழியை
எடுத்தாள்தல்தான்
மேன்மை.
எடுத்த எடுப்பில் ஏறுமாறாய்
பழமொழிகள்எடுத்தாண்டு
பல்லிழிந்து போவதனை
சொல்லியா தெரியவேண்டும்?

# மீண்டும் எழுவோம்

என் அன்பே
நினைவுக்குள் நினைவாக
நின்று எனையாளும்
நின்
நிஜத்தின் தரிசனம்
நினைவுகள் உள்ளவரை
நிலைக்குமடி.

பனியின் துளியாக
புனிதம்
உன்னிதயம்
புண்படுமோ வென்று
புழுவாய்த் துடிக்கிறேன்.
எனது பேனாவில்
உனது நினைவன்றோ
மையாகச் சுரக்கிறது
உனது நினைவுகளில்
மனது அடிபட்டு
சிந்தனை நின்றதடி
என்
எழுத்தும் நின்றதடி.

மடல் வெடித்த
தென்னம் பூப்போல
கள்ளமில்லாத
உன்சிரிப்பின்
ஒளிப்பிரவாகத்தில்
அள்ளுண்டுபோனது
மனது.



நீ,
அல்லித்தண்டாக
அசைந்து வரும் போது
உன்
கண்ணின் மணிகளுக்குள்
முழுநிலவின் தரிசனம்.



தரையில் துடிக்கையில்தான்
தண்ணீரின் பெறுமதியை
செருக்குச் சிறுமீன்
உணர்கிறது
நானும்
அதுதானே?
கால நகர்வில்தான்
சிலருக்கு
ஞானம்பிறக்குதடி
ஒரு
கெட்டகனவிலே
பட்ட அருவருப்பை
தட்டி ஆன்மாவை
சுத்தம் செய்த போதுதான்
நெஞ்சைக் கௌவிய
இருள் அகன்றது.



எனது சார்பாக
துன்பத்தைச் சுமந்தவளே
துயருள்புதைந்தவளே
கோடைமேகமென
கூரைவேந்தவளே
வாழ்வின்
கனத்த
இடிபாடுகளுக்குள்ளிருந்து
மீண்டும் எழுவோம்
குழந்தைகளாய்!

## உனது நினைவாக

துயரம்
எனது நினைவுகளை
திரைபோட்டு
மறைத்துவைத்தது.
இன்று
அந்தத் துயரத்திரையை
சற்று அகற்றிவிட்டு
கடந்த கால
தடங்களைப் பார்க்க
எனது
மனம் துடித்தது.
என்னவளே
அந்த நினைவு
உன்னை
எனது மனக்கண் முன்னே
கொண்டு வந்து
நிறுத்தியது.



இருள்
கருக்கிவிட்டது
சற்றுத் தொலைவிலுள்ள
உறவினர் வீட்டிற்கு
சென்றிருந்த நீயோ
இன்னும் திரும்பவில்லை.
இருப்புக் கொள்ளாத
எனது இதயம்
என்னை
எழுப்பித் துரத்தியது.

வெளியே
என்மேல்

விழிவைத்திருக்கும்
வழிதவறிய
வில்லாளிகளின்
நினைவு
உன்னைத் தேடாதபடி
என்னைத் தடுத்தது.
எத்தனை தடவைகள்
என்னுடைய
எண்ணப்பறவை
உன்னை
அந்த வீதிகளெங்கும்
தேடி அலைந்தது.
கடல் கடந்துவந்த
சுடுகலம் ஏந்திய
துச்சாதனர்கள்
கண்களில்
நீயும்......?
எமது வீடும்
சோகத்தைச் சுமந்தபடி
அமைதியாக இருந்தது
ஆனால்
நான் மட்டும்
நானாகவில்லை.

வெளியே வரப்பயந்து
விழிபிதுங்கி
புற்றுக்குள் பதுங்கியிருக்கும்
சுண்டெலிபோல,
கறவையைக் காணாத
கன்று போல
அன்பே



உன்னைக் காணாது
அந்தத் தனிமையில்
நான்
இதயம் வெடித்து
அழுது புலம்பினேன்.
அதை
இப்போது நினைத்தாலும்
அப்படியேதான்
அழவேண்டும் போலிருக்கிறது.
என்னவளே
தளர்ந்துபோன கால்களுக்கு
ஊன்று கோல்போல்
எனது வாழ்க்கையில்
நீ,
அந்த நன்றிக்காக
இந்தக் கவிதையை
எனது பேனா
உனது நினைவாக.....



## மன்னித்துக்கொள்

இனியவளே,
உனது நினைவுகள்
சுவையாகவும்
சூடாகவுந்தான்
இருக்கின்றன.




நான்
போதைத் தேவதையுடன்
போகம் நடத்திய
பேதமைக்காக

- நீ, என்னுடன்
மோதிக் கொண்டதால்
சேற்றை மிதிப்பது போல்
உன்
இதயத்தை
மிகவும்
நோகமிதித்து விட்டேன்.


உன்னை
வெறுத்தன்று
உன்னோடு
வாழவேண்டுமென்ற
வெறிதான்.

இதில்
நான்
தோற்றுப்போனால்
தோல்வி
எனக்குமட்டுமல்ல
அதை
தாங்கவும்
உனக்கு
இதயம் இருக்காது,

நேற்றுவரை
உன் இதயத்தில்
நான்
பிளந்தரணங்கள்
நாளை
உனது
இனிய நினைவுகளுக்கு
அழியாத் தழும்புகளாய்!



ஒரு தாயைச் சுற்றிக்கொண்டு
குறும்பு செய்யும்
குழந்தைபோல
நானும்
உன்னுடன்
அன்பே,
உனக்கு
சினக்கிறதா?
நான்
ஒரு
பைத்தியக்காரன்
துன்புறுத்துவதும்
நினைத்து
துயருறுவதும்
அப்பொழுது என்னுள்
எல்லாமே சிதைந்து
நெருபபாய்த்
தீய்ந்து போவது
உனக்குத் தெரியுமா?
எனது
நாவு
அள்ளிக் கொட்டிய
சுடுதணல்களால்
உனது
நெஞ்சு
வாழும் நினைவை
இழந்து விட்டதாக
நீ வடித்த
கண்ணீர்
நெருபபில் உருக்கிய
ஈயத்துளிகளாய்




என் இதயத்தில்.
என் அன்பே
ஏழுதரமல்ல
ஏழு
எழுபதுதரம்
என்னை
மன்னித்துக்கொள்



## இழப்பு

கொதிக்கும் கோடையில்
புலுட்டுப் புழுதியில்
கால்கள் புதைத்து
நாங்கள்
ஒப்பாரி படித்து
கொடும்பாவி இழுத்தது
வானம் பொழிந்து
மண்வளம் சிறக்கவன்றி
பிரளயத்தால்
அழிந்து போவதற்காகவா?




## கேளுங்கள்

கேளுங்கள் ஆயிரம்
கேள்விகள் கேளுங்கள்
கேள்விகள் உங்களை
ஞானிகளாக்கும்

கண்ணை இழந்தவர்கள்
ஒரு பொருளை

முற்றும் அறிவதுண்டோ?
தொட்டுப்பிடிக்குமிடம்
மட்டும் உண்மையென
மட்டக்கருத்துரைக்கும்
மன, கண்ணை இழந்தவர்கள்
அறிவுத்திரியினிலே
கேள்வித், தீயினைத்தட்டிவைத்தால்
ஞானச் சுடர் பரவி
வையம், வாழ்வினைப் பெற்றிடுமே.

அறிவின் சுடரெழும் கேள்வியில்
ஆன்ற, ஞானப் பொறிபுகுந்தாழத்தில்
உள்ளப் புன்மைகள்
அத்தனையும் பொசுக்கி
நன்மைத்தனத்தினால்
நிலம் சொர்க்கமுறும்.



## தட்டுங்கள்

தட்டிப் பாரும் இதயக்கதவை
தட்டுக. தட்டினால்
உண்மையை நீருணர்வீர்

தட்டித் திறந்து பாரும்
வெட்ட வெளிச்சமாக
பல, நல்லவை அல்லவைகள்
உள்ளே குவிந்திருக்கும்.

மற்றையோர் செய்தவறை
மாத்திரம் பிட்டுவைத்து
மகிழ்ச்சி, எய்தும் நிலைவிடுத்து



மெத்தமனது வைத்து
கொஞ்சம், கூட முயற்சிசெய்து
சொந்தத் தவறுகளை
கல்லி வெளியெடுத்து
தூர, வீசி எறிந்துவிட்டால்
சும்மாக மனதிருக்கும்
சுகம், தானே குடியிருக்கும்



## தேடுங்கள்

தேடுக உண்மையினை
தேடி அலைந்து ப்ாரும்
அந்த, ஜோதி தெரியவரும்

உண்மை ஒளிதெரிந்தால்
உலக கட்டுக்கள் அறுந்து விழும்
நான் எனது என்ற
பற்றுக்கள் இத்துவீழும்.

ஒரு, தாயின் குழந்தைகள் போல்
உலகோர்
ஒட்டி உறவு கொண்டு
பட்டிமந்தைகளாய்
அன்புத் தொட்டியில் தீனியுண்பர்
பகை, ஒட்ட அறுந்ததினால்
அச்சம், இன்றி மகிழ்ந்திருப்பார்.

## ஒப்புக்கு

சுழலும் பந்தும் பூமியில்
நான்கில் மூன்று தண்ணீர்ப் பங்கு
நான்கில் ஒன்று நிலத்தின் பங்கு
நினைத்திடு அதுபோல் வாழ்க்கைத் தளத்தில்
வலிமை மிக்கதாய் விழிப்புடன் அநீதி
மெலிவு உள்ளதாய் குற்றுயிராக
வீதியோரம் கிடக்குதுநீதி.



வீடுகள் எரிந்ததும் கோவில்கள் இடிந்ததும்
வெட்டிய தலைகளை காட்சிக்கு வைத்ததும்
கற்பை அழித்ததும் கன்னிமை கெடுத்தலும்
பச்சைக்குழந்தையை நதியில் எறிந்ததும்
உடலைச் சிதைத்து நரம்புகள் உருவி
உயிருடன் சிலுவை மரத்தில் அறைந்ததும்
இனத்தை அழித்ததும் நாட்டைப் பிடித்ததும்
கலிங்கப் பரணியில் கொட்டிய இரத்தமும்
வீதியில் பிணங்கள் வீழ்ந்து கிடந்ததும்
நாலந்தா பல்கலைக் கழகம் எரிந்ததும்
சமணரைக் கழுவில் ஏற்றி மகிழ்ந்ததும்
அன்று நடந்த சரித்திரம் அல்லவா?
இன்று மட்டும் என்னடா புதுமை?
மனிதம் செத்ததாய்க் சலிப்பு எதற்கு?



வதையும் கொலையும் முரணும் மோதலும்
முன்பைவிட முகில் தொட்டு வளர்வதும்
வதையின் ஏட்டில் பரிமாணந்தான்
மானிடம் வதைபடாச் சரித்திரம் உண்டோ?


பிணங்கள் மிதித்து யுகங்கள் கடந்த
கொலைக்கலாச்சாரத் தடங்கள்
நிலைத்திட இங்கு காரணம் என்ன?
காரணம் இன்றி காரியம் இல்லை
காரணம் தேட நாதியுமில்லை
காரணம் கண்டோர்
பாதியில் வீழ்ந்த
கதைக்கு இங்கே பஞ்சமும் இல்லை.




ஒப்புக்கு மார்பில் அடிக்கும் கூட்டம்
தப்புக்கணக்குப் போட்டதனாலோ
மானிடம் செத்ததாய் அழுது வடிகிறது?
மரத்தை அறியா மனிதருக்கா இவர்
இலையைப் பிடுங்கிக்காட்டுகின்றார்?

## முகங்கொடு

குயவனின் கையிலுள்ள
களிமண்போால
வாழ்க்கை
எங்களை
பிசைந்து தட்டுகிறது
பிரச்சனைக்குப் பயந்து
முதுகு காட்டுபவர்களே
பிசையப்பட்ட
களிமண்ணிலிருந்து
புதிய கலயங்கள்
படைக்கப்படுவதனால்
நாங்கள்
மரணத்துக்கும்
முகம் கொடுக்கிறோம்!



## வேண்டுதல்



பொய்யுரைத்து புகழ் சேர்க்கும்
பேர்வழிகள் உண்டு
பொல்லாங்கு செய்து புகழ்
தேடுவோரும் உண்டு
வான்கோழி புன்சிறகு விரித்தாடி
களிப்பதுபோல்
தம்தகுதி தனைமறந்து
நடிப்பரும் உண்டு உண்டு
பொன்னாடை வாங்குவித்து
போர்த்துவிப்போரும் உண்டு.

புகழுக்காய் மோதித்து
தொண்டு செய்வோரும் உண்டு
புகழ்க்கன்றி பிறர் தொண்டு
புரிந்து புகழ் அடைவோர் உண்டு
புகழுக்காய் உயிர் கொடுக்க
துணிந்தவரும் உண்டு
புவி நன்மை பெறவென்றே
உயிர் கொடுப்போரும் உண்டு
புகழ் பெற்று வாழ்தலன்றோ
புவிவாழ்வார் இலக்கு என்று
புகல்கின்ற தர்மநெறி
நூல்கள் பல உண்டு உண்டு

புகழுக்கு முகம் காட்டி
தாழ்மைக்கு புறங்காட்டி
புவிவாழும் கற்றவர்கள்
பலரும் உண்டு
புகழுக்குப் புறங்காட்டி
தாழ்மைக்கு முகம் காட்டி


புவிவாழ்ந்த ஞானியர்கள்
சிலரும் உண்டு.
"புவிவாழும் மனிதர்கள்
தமைப் போற்ற வேண்டுமென
நெஞ்சு நிறை புகழார்வம்
கொண்டவரே கேடுமக்கு!"
என்றுரைத்த நாயகனே
யேசுபிரான் போதகனே

இழிவுற்ற ஆன்மாதான்
புகழார்வம் கொள்ளுமென்று
புகட்டிய உன்போதகமும்
புனிதமுறும் உன் வாழ்வும்
புகழார்வம் புரை யோடி
அகவாழ்வு சிதைந்தோரை
நிஜவாழ்வுக் கழைத்துவர
நைந்துருகி வேண்டுகிறேன்.




## தியானம்

சப்பாணிக்கட்டு
கண்களைமூடு
சும்மாயிருந்து
தியானித்துப்பழகு
சோதிவடிவாயுனது
சத்தியின் தரிசனங்கள்.
மனம்
பரிணாமம் பெற
உள்ளே
இனம் புரியாத
ஓர் இன்பத்தின்
வெள்ளப்பிரபாகம்
துன்பத்தை அடித்துச்செல்லும்.



# என்ன சொல்வேன்



ஒட்டிய தெருநாய் ஒன்று
ஓரமாய் அழுகிக் கிடந்த
பிணத்தினில் வடிந்த நிணம்
மோந்து உவந்து நக்கும்
காட்சியை அருவருத்தேன்
வாழ்க்கையே வெறுத்ததுபோல்.

மனிதத்தைத் தின்ற ஒரு போரின்போது
தவியாய் தவித்தோரின மக்களின்
வயிற்றுள் பசி பேய் சென்று
குடல்களைக் கிழித்த போது
பாசத்தை மிதித்துழக்கி
பிள்ளையை கறி சமைத்து
பெற்றவள் உண்ட கதை
விவிலிய வேதந்தனில்
படித்தோர் அத்தியாயம்
இடியென நெஞ்சில் வீழ
உறைந்தது இதயமெலாம்
விழிகளில் நீரைச் சிந்தி.





இகத்தையே குலுக்குவித்த
இரண்டாம் மகாப் போரின்போது
காய்கறி மட்டும் உண்ணும்
கனிந்ததோர் இதயங் கொண்டோன்
பர்மாவில் தெருக்களிலே
தன்னூர் காக்கவேண்டி
தரையிலே கிடந்தழுகி
வடிகின்ற பிணத்தின் நிணம்
குடித்ததைக் கேட்ட நெஞ்சு
செத்தது மணித்துளிகள்.



கிஞ்சித்தும் நெஞ்சிலொட்டா
அஞ்சிடும் கருமந்தனை
செய்திடத் தூண்டும் சூழல்
வலிமைக்குள் மனிதம் சாகும்
சுழியினைப் போன்ற இந்த
சூழலுக்கப்பால் நின்று
புத்தனைப் போல அன்பு
தத்துவம் பேசுகின்ற
மெத்தவும் படித்த மாந்தர்
சுய நலம் கருதி ஆற்றல்
விற்றுயிர்வாழும் கூட்டம்
வெள்ளைக்கு வெடம் போடும்
வேடிக்கை என்ன சொல்வேன்?



## அதிஷ்டம்

வெள்ளிகள் பூத்த
குடிசையில்
கனமழையில் நனைந்த
ஓர்
ஆண்டியை
சடுதியில் விழுந்த
பேரதிஷ்டம்
பெரியமைச்சர் ஆக்கியது.
ஆண்டி இனி அவராக
வேண்டிய மட்டும்
நிலம் விழுங்கி
நீர் விழுங்கி
கப்பல்கள் விழுங்கி
நிமிர்ந்த
மாடிகள் விழுங்கி
தலை நிமிர்ந்தாரே
பண்ணையாராக!




## ஒரு சுயதரிசனம்

வானம் ஒரு முறை
அழுது ஓய்ந்த பின்
தலைநகர் கொழும்பின்
வர்த்தகத்திற்குப் பேர்போன
சந்தடிகள் நிறைந்த
நான்காம் குறுக்குத்தெருவில்
கால்கள் புதைந்து நடக்கும்
மன உணர்வோடு
தோழமை என்பதும்
நட்பு என்பதும்
செல்லாக்காசாய்க் கால்களில் மிதிபட
மனிதத்தை தேடி
நான் அலைக்கின்றேன்.

கடந்த காலங்களில்
நடந்த பாதைகளில்
தொலைந்துவிட்ட சுகத்தைதேடி
தொல்லைப் படுகிறவர்களில்
நானும் ஒருவன்தான்.

பொக்கை வாய்க்கிழவி
வெறும் வாயை மெல்வது போல்
பழைய சுகங்களை
பெருமை அடித்துக் கொள்வதில்
ஏதோ சுகங்காணும்
எனது இயலாத்தனத்தை
இனங்கண்டபோது
எனது பலவீனம் எனக்குப்பட்டது.




அன்றாடம் கூழுக்காய்
அடித்துண்டு வாழ்பவரின்
குடியிருப்பின் குடிசைக்குள்
சொகுசு மெத்தையில் படுத்தபடி
விடிவுக்காய் கனவு கண்ட
கொள்ளைப் பேராளன் நான்
அனைத்துக்கும் அந்நியமாய்
அனைவருக்கும் அந்நியமாய்
இலக்குமாறி போனவன்.

ஓர் இன்பப்பொழுது போக்குக்காய்
நண்பர் குழாத்துடன்
மரநிழலின் கீழிருந்து
பலாவிலையில் பட்டைகோலி
கூழ்குடித்து மகிழ்ந்த
அந்த அமைதியுகத்தை
நொந்த மனதோடு நினைத்துப் பார்த்து
ஆன்மதிருப்திக்காக
கவிதைகள் எழுதுகிறேன்.

மனிதத்தைப் பற்றிய எனது தேடலில்
எனக்கோர் ஆசானாய்ப் "பச்சோந்தி"
என்னைப்பற்றி எடுத்துரைத்து
விழிதிறந்து வைத்தது;
எங்கு செல்லினும்
எங்குதான் வாழினும்
குணத்தை மட்டும் மாற்றிடாமல்
நிறத்தை மாற்றி
பிழைக்கத் தெரிந்த "பச்சோந்தி"
மனிதரிலும் இருப்பதனை
எனக்குள்ளே காட்டியது.



முதுகெலும்பில்லாத
மதிகெட்ட கோழைத்தனம்
மனிதத்தைகாணும்
நுட்பமறியாது;
இன்னார்தான் எனக்கு
பொல்லாங்கு செய்தாரென
சொல்லவுந் துணியாத
மனிதப் புழு எனக்கு
மனிதத்தைத்தேடல்
மனங்கொள்ளக் கூடியதோ?



என்றோ ஒரு நாள்
ஆண்டிகளின் சபையினிலே
மௌனப் புழுவாக
முடங்கிக் கிடந்தவென்
இயலாத்தனத்தை
எடை போட்டுப் பார்க்கின்றேன்.
அன்றொருநாள்
அருகிருந்தான் மகுடிக்கு
ஆடியவென் பேதமைக்காய்
வெட்கிக் குனிகின்றேன்.


பனிமழை பொழியும்
கனடாவின் தெருக்களில்
என்னை எவரும் காணநேரின்
மனதார மன்னிப்பீர்
ஏனெனில்;
எனது தெருக்களில்
இன்னமும் ஒரு தெருநாயாய்
சுற்றி அலைவதையே
நற்சுகமாய் கருதுகின்றேன்;
மரணம் எனைவந்து

இயற்கையாய் அழைக்குமெனில்
ஆன்மதிருப்தியற்ற
அநியாயச் சாவுதான்;
தற்செயலாகக் குறிதவறி
சுடுகலத்தின் ஒரு சன்னம்
எனைத்தாக்கி மரணிக்கினும்
நித்தமும் ஆனந்தந்தான்
மரணத்தை நான் வென்றவன் காண்.



## மொய்த்துக் கிடக்குமோ?

உடலுக்கு உயிர்போல
வாழ்வுக்கு பொருளென்றால்
வாதம் இதில் இல்லை
பொருளுக்காய் வாழ்வு எனில்
வாழ்வில் அர்த்தம் இல்லை
பொருள் சிலரின் கையிலென்றால்
பெருகுவதோ தொல்லை.



பொருளை விடப் பெரிது வாழ்வு
பகிர்ந்திடுவேன் கேளும்
பொருள் வாழ்வின் அத்திவாரம்
வாழ்வு அதில் எழுந்த
அழகியவோர் கட்டிடமே;
விலங்குகளும் குடித்துண்டு
சந்ததிகள் பெருக்கின்றன
மனித வாழ்வும் இதையொக்கின்
மக்களுக்கும் மாக்களுக்கும்
பேதமேது கண்டீர்?

அவனவன்தன் ஆற்றலினால்
பொருளீட்டி வாழ்தலுண்டு
பொருளீட்டித்தான் மட்டும்
பெரு வாழ்வு வாழ்வனெனில்
பொது வாழ்வின் தர்மநெறி
மெதுவாகத்தான் கெடுமே.

தேவைக்கு மேல் பொருளீட்டும்
மனிதனது இதயம்
பொருளாகிப் போவதனால்
மனிதம் அங்கு சாகும்
ஆனதினால் அவன் வாழ்வு
பூதவுடல் பொன்னகைகள்
அணிந்தது போலாகும்.

அனைத்துலகும் அவன் சொத்தாய்
ஆனபோது கூட
ஆன்மாவைத் தொலைத்து விட்ட
பேதையன் வாழ்வில்
பேரின்பம் தான் வருமோ?


உண்மையினை ஆராய்ந்து
தேடுகின்ற பாதையிலும்
நீதிக்காய் போராடி நெஞ்சமது நோகையிலும்
சமுதாய உயர்வுக்காய்
சலியாது உழைக்கையிலும்
அதிகார மமதைக்கு
தலை சாய்க்க மறுக்கையிலும்
கலைகளில் காதலுற்று
கரும மாற்றித் திளைக்கயிலும்
பேரழகு காட்டித்தினம்



புன்னகைக்கும் இயற்கையன்னை
எழில்கோலம் சுவைக்கையிலும்
நெஞ்சமதைத் தூய்மை செய்யும்
அருள் மொழிகள் படிக்கையிலும்
ஆனந்தமுறும் ஆன்மா
பொருளாசை சதமென்று
மொய்த்துக் கிடந்திடுமோ?

## கனவு அல்ல

மானுட விளக்கே
மனிதனின் இலக்கே
சிலுவையின் பாதையில்
நீதியை
விதைத்தவரே,
தியாகச் சிகரத்திலே
மானிட
அன்பை வரைந்தவரே
ஓ, கிறிஸ்துவே!
கொலைஞன் ஏரோதன்
இன்னமும் கொலுவிருக்க,
நாட்டிற்குள் புகுந்து கொண்ட
உரோமனியர்கள்
எங்களைத் துன்புறுத்த
ஒதுக்குப்புறமான
ஒரு பனங்கூடலுக்குள்
மனித எலும்புகளாலான
ஒரு தொழுவத்தில்
துப்பாக்கிகளின் அட்டியின் மேல்
நீ பிறந்திருப்பாய்
ஒரு கனவு.



கண்விழித்துப் பார்க்கிறேன்
காலம் அண்மித்துவிட்டதோவென்று
கனவு இல்லை
நனவுதான்.

மண்ணின் மனிதர்களின்
மனக்கலங்கண்டு
வடபுலத்து வான்முகம்
உடைப்பெடுத்து ஓடுகிறது
எத்தனை எத்தனை
மாத்தாள் மரியாள்கள்
தங்கள் சகோதரர்களுக்காக
அழுது புலம்புகிறார்கள்
எத்தனை விதவைகள்
தங்கள் மைந்தர்களைத் தேடி
வீதிகளில் விம்முகிறார்கள்

வானத்தை அசுத்தப்படுத்தி
கழுகுகள் போடும்
எச்சக் குண்டுகள்
வீடுகளை நொருக்க
உயிரைக் கையில் பிடித்தபடி
தப்பி ஓடும் மக்கள் கூட்டம்
ஏரோத்திற்குப் பயந்து
எத்தனை சூசை மரியாள்கள்
தங்கள் பிள்ளைகளுடன்
எகிப்திற்கு
தப்பி ஓடுகிறார்கள்.

செயற்கையாய் ஊனமுற்று
வாழ்வைத் தொலைத்தவர்கள்
ஒரு மீட்பனுக்காக
கண்விழித்திருக்கிறார்கள்.




பசிப்பாம்பு தீண்டியதால்
அலரிவிதைச் சஞ்சீவியில்
சுகங்கண்டோர்
இழவையா சொல்லியழ?
இங்கு
போதனையைக்கேட்க
களத்திற்கு வந்தவர்கள்
பசியால் தவிக்கிறார்கள்
ஆனால்
ஐந்து அப்பங்களும்
இரண்டு மீன் துண்டுகளும்
கையிருப்பிலுண்டு
பிட்டுக் கொடுக்க
ஒரு நல்ல மீட்பனுக்காய்!

களை எடுப்பு என்று சொல்லி
நமது வயல் வரம்புகளில்
பிடுங்கிப் போடப்பட்ட
எமது குடல்கள்
நெற் பயிர்கள்
கருகிக்கிடக்கின்றன;
எமது வயல்களில்
நெற்பயிரை விழுங்கிய மிடுக்கில்
களைகள்
சடைத்து நிற்பதைப் பார்த்தபோது
எனது
வயிறு பற்றி எரிந்தது.
சிவப்பு நெல் மணிகளாய்
கண்ணீர்த் துளிகள்
எரிவுடன் உதிர்ந்தன.

பூவடிக்கும் தேனமுதை
தாம் குடித்து




மகிழ்ச்சியுறும் வண்டுகள் போல்
வாழ்க்கையைச் சுவைக்கும்
வேட்கையில்
என், நெஞ்சு பிரார்த்தித்த போது
முள் முடியையும்
சிலுவையையும் அல்லவா
பரிசாகத் தந்துள்ளாய்
விளங்கி விட்டது.



## ஓ கிறிஸ்துவே!

ஓ கிறிஸ்துவே!
இங்கே.............
அசுத்த ஆவியால்
பீடிக்கப்பட்டவர்கள்
கல்லறைகளில் இருந்துகொண்டு
வழிப்போக்கர்களை
கல்லால் எறிகிறார்கள்
தடியால் அடிக்கிறார்கள்
எந்த நேரமும் ஊளையிடுகிறார்கள்.
இரவுபகல் பாராமல்
வளவிற்குள் சுற்றுகிறார்கள்
வீட்டுக் கூரையைத் தட்டுகிறார்கள்.



ஓ! கிறிஸ்துவே
நீர், இனிப் பிறக்க வேண்டியது
பெத்தலேகெமில் அல்ல,
எமது
பனங்கூடலுக்குள்தான்.

# மௌனச் சதி




பேசாமல் பார்த்திருக்கும்
கல்லறை போல்
கல்லாய்ச் சமைத்திருக்கும்
இலக்கியத்தில் வித்தகரே!

மெத்தப் படித்தவரும்
பட்டங்கள் பெற்றவரும்
மட்டுந்தான் கலைத்துவமாய்
இலக்கியங்கள் படைப்பவரோ?
பட்டறிவு மிகப்பெற்று
பகுத்துணர்ந்து பார்க்கவல்லார்
படைக்கின்ற இலக்கியங்கள்
பட்டியலில் சேராதோ?

கலைத்துவமும் கருத்துவமும்
சங்கமித்த கலைப்படைப்பை
கண்டு மனமெரிந்து
நெஞ்சக் குளத்தினிலே
அழுக்காறைப் பாயவிட்டு
ஊமையைப் போலிருக்கும்
இலக்கிய வித்தகரே!

பட்டங்கள் மிகப்பெற்று
உமக்கென்று சிற்சில
வட்டங்கள் போட்டவரே
வட்டத்துக்கப்பாலே
கலைவல்லார் உளரென்றால்
உம் பேனா எழுதாது
உம் வாயோ பேசாது.

பேசாமல் இருந்து கொண்டு
பேசும் கலைப்படைப்பை
புதைக்குழிக்குள் மூடுவதை
மௌனச் சதி என்று
மெல்லச் சொல்லி வைத்தான்
மேலைநாட்டு ஒரு மேதை.



## கிட்டவராதே

கவர்ச்சியானவளே
என்
வெறுப்புக்குரியவளே
கிட்டவராதே
ஒட்டும் உறவுமில்லை
உன்னோடு
அகன்றுபோ!

கலப்படமாய்
கள்ளத்தராசாய்
பதுக்கலாய்
கையூட்டாய்
போகப்பொருளாய்
கள்ளக்கணக்காய்
கடும் வட்டியாய்
இன்ரக்கூலராய்
பொன்னாய்
மண்ணாய்
மனிதத்தை
வீழ்த்தும் பெண்ணே
கிட்டவராதே
அகன்றுபோ!



பொய்யாய்
புழுகாய்
புனைந்துரையாய்
புகழாய்
பதவியாய்
பந்தாவாய்
அவதூறாய்
ஆவலாதியாய்
கோள்குண்டணியாய்
இனமாய்
சாதியாய்
மதமாய்
எங்கும்
நீக்கமற நின்று
நித்தம் சிரிப்பவளே!
மாயவிழிகாட்டி
மனிதம் வீழ நடப்பவளே
கிட்டவராதே.
அகன்றுபோ!

என்னை வீழ்த்த
உந்தன்
கண்ணையா
சிமிட்டுகின்றாய்?
புன்னகைத்தா
ஆசைத்
தாகத்தை மூட்டுகிறாய்?

நான்
புயலுக்கு வீழ்கின்ற
மரமா என்ன?
தரை



வீழாது நிற்கின்ற
நாணல் என்பேன்.

எனக்குத் தெரியும்
உனது பெயர்
சுயநலம்.
வீடுகள்தோறும்
ஓடு
ஏந்திப்பிழைத்திடினும்
வீழ்வனோ
உன்னிடம்.
ஒட்டும் உறவுமில்லை
உன்னோடு
கிட்டவராதே
அகன்றுபோ!



## காதலாகிறேன்

நெய்த நிலத்தில்
வெய்யில் குளிக்கின்ற
செந்நிற
பட்டிப்பூவே!
களைத்து இளைத்தவென்
கனத்த இதயத்தில்
ஜீவக்கனல் மூட்டுமுந்தன்
புன்னகையில் மெய்மறந்தேன்.

சின்னவள் உனக்குக் கூட
சிங்கார வதனம் தந்த
சித்து விளையாட்டின்
உத்தமசெல்வியே
ஏழைக்கவிஞன்யான்
உன்மீது
காதலாகிறேன்.



## சங்காரம்

வறுமைக்கு
இனம்
மதம் என்ன
சாதி என்ன
நிறமும் என்ன?

கொடுமைக்கு
குலமென்ன
கோத்திரந்தான்
என்ன? என்ன?

தென்றலிக்கே
பேதங்கள்
வகுத்தா வீசும்?

சூரியனும்
சந்திரனும்
வேற்றுமைகள்
வகுத்தா சுற்றும்?
பெருவெள்ளம்
புயற்காற்று
மின்னலிடி
வரட்சியிவை
வகுத்தனவோ
வேற்றுமைகள்
கண்ணிழந்த
மானிடரே?

சிங்களவர்க்கு
தமிழருக்கு



முஸ்லீம்கட்கு
பறங்கியர்க்கு
வறுமை வேறு
பசி வேறு
வகுத்தவர் யார்?

பிடி அவரை
சங்காரம் செய்வோம்
ஒன்றாய்!



## வேலி

சாலையோரம்
காக்கி போட்ட
வேலியொன்று
காவலுக்கு நின்றது
வேலி தாண்டி
போன என்னை
நிற்கும்படி சொன்னது.

எந்தத்திசை சொந்தத்திசை
என்று அது கேட்டது
வடதிசைதான் என்றதுமே
விழியுருட்டிப் பார்த்தது.



கள்ளவிழி உருட்டியது
அங்கும் இங்கும் பார்த்தது
காலிருந்து தலைவரைக்கும்
என்னை உற்றுப் பார்த்தது
எனக்கு நெஞ்சுள் வியர்த்தது.

அனாவோ இனாவோ
என வெருட்டிக் கேட்டது

அடையாள அட்டயினை
காட்டும்படி பணித்தது.

வேலி மனம் வேண்டுவது
விழிகளிலே தெரிந்தது
வீண்தொல்லை தவிர்ப்பதற்கு
என்மனது துணிந்தது.

சேட்டையுள் கைவைத்து
அடையாள அட்டையுடன்
மடித்த புது நீல நோட்டு
ஒட்டி வைத்த மாதிரியாய்
வெளியெடுத்து துணிவுடனே
வேலியிடம் நீட்டினேன்.

வேலி விழி சிரித்தது
கண்ணிமைக்கும் நேரத்தினுள்
நீல நோட்டு போனது
அடையாள அட்டைமட்டும்
என்னுடனே வந்தது
எனக்கு வழி பிறந்தது.



## காத்திருப்பு

வடித்த கண்ணீரும்
சிந்திய வியர்வையும்
பிழியப்பட்ட செந்நீரும்
கூலி கேட்கிறது.
கடலை உழுது
நெல்லை விதைத்து விட்டு
அறுவடைக்காகவா
காத்திருப்பது?


# மௌன ஓலம்

அவள்
உடல் உணர்ச்சிகள்
நெருப்பாய் தகிக்கின்றன.

கொட்டும் யுக மழையில்
தோய்ந்து மனங்குளிர
ஏங்கும் அவளுக்கு
சொட்டு பனித்துளியின்
தூறல் கசக்கிறது.

பெணகளை இன்னமும்
ஆண்களின்
சுகபோகத்தின்
கருவிகளாகவே
சமுதாயம் கருதும்போது
தனது பிரச்சினையை
தனது
கணவனிடம் சொல்லவே
அவள் தயங்குகிறாள்.

ஒரு நாள்
சூழல் அமுக்கத்தில்
அன்னிய வானம்
கறுத்தது இடிமுழங்கி
கொட்டிய யுக மழையில்
நனைந்த சுகத்தை
தன்
கணவனிடமா சொல்வாள்?
இருப்பினும்
அவள் ஆன்மா
அவள்
இதயத்தை திருகுகிறது.



## எப்போது

கடல்
அலைப்பூக்களை
கொத்துக் கொத்தாய்
உருட்டி வந்து
தள்ளி விடும்
பம்பலப்பிட்டிக் கடற்கரையில்
நீண்டு செல்லும்
புகையிரதப் பாதை.
அஸ்தமனத்தின் போது
சிவப்பேறிப்போன
சூரிய விழி,
ஒரு நேரத்தில்
ஒரு சிகரட்டை
நான்கைந்து பேர்
உறிஞ்சிச் சிதைப்பதைப்போல
குப்பத்துப் பூக்கள்
சிதைவதைப் பார்த்து
சகிக்க முடியாமல்
தொடுவானத்திற்குள்
தொலைந்து கொண்டிருந்தது.

சில நேரங்களில்
நாட்டின் மானங்காக்க
சட்டத்தை சுமந்து வரும்
ஆன்மா செத்த வேலிகள்
குப்பத்து பூக்களை
துரத்தியடிக்கும் போது
கிறிஸ்துவின் நினைவு
நெஞ்சை நிறைக்கிறது.



வறுமைச் சிறைக்குள்
வெறுமை வயிற்றிற்கு
தீனி போட
குப்பத்துப் பூக்கள்
உடலை
விற்பனை செய்கின்றன
இவைகளுக்கு
விடுதலை
எப்போது?

## பயந்து அல்ல



ஓ! இயற்கையே
மரண தேவதையே
நீ.
எங்கே இருக்கிறாய்?
உன்னை நினைத்து
நான்
உள்ளஞ்சி உறைந்தபோது
நீ
அக்களித்தாய்
ஆனந்தித்தாய்.
ஆனால்
உன்னை
நான்
நேருக்கு நேர்
சந்திக்கத்துணிந்த போது
நீயும்
ஒளித்துக் கொண்டனையோ?

ஓ!
மரணதேவதையே
நான்
தலை மறைவாக வில்லை
என் வாழ்க்கையே
தலைமறைவாகிவிட்டது.
இருந்தும்
நீ இன்னமும்
என்னை
தேடுகிறாயாமே?
எலி
பொறியில்
பிடிபடலாம்
ஆனால்
அதன்
இருத்தலுக்கான
இரைதேடும்
இயக்கத்தைக் தடுக்க
யாராலும் முடியும்?
ஓ!
மரணதேவதையே
நானும் ஒளிந்திருக்கிறேன்.
பயந்து அல்ல
பார்த்துக் கொண்டு!




## அகன்று போங்கள்!

பொற் கதிர் சூரியனே!
பாற்கதிர்ச் சந்திரனே!
முத்தொளி
வெள்ளிக் கூட்டங்களே!
அகன்று போங்கள்!



எனது
செம்மண் தெருக்களில்
ஒரு முறை
ஒரு முறை மட்டும்
நான்
உலவி வரவேண்டும் ;
ஏனெனில்
உங்கள் வெளிச்சத்தில்
என்னைத்தேடும்
மரணத்தின் கண்களை
கக்கிருள் மறைக்கட்டும்
அகன்று போங்கள்!
ஏனென்றால்
இருளின் வருகைக்காய்
இதயம்
பிரார்த்திக்க
ஒதுக்குப்புறமான
ஒரு
பனங்கூடலுக்குள்
தலைகீழாய் தொங்கும்
வெளவ்வால் போல்
நானும்
நான்கு சுவர்களுக்கிடையில்
இருந்து தவிக்கிறேன்.

அதனால்
ஒரு முறை மட்டும்
எனது
செம்மண் தெருக்களில்
நான்
உலவிவர வேண்டும்
அகன்று போங்கள்!



# இல்லறச் சோலையிலே



இல்லறச் சோலையிலே - இதந்தரும்
இளமைக்காலத்திலே
மாபெரும் கோலத்திலே - மங்கள
இன்னிசை கீதத்திலே
பூரித்து நிற்கையிலே - உணர்ச்சிகள்
பூத்துக்குலுங்கையிலே
பூவினில் தேன்வண்டு போல - புது
இல்லற இன்பத்தை எய்துவீரோ!

கிள்ளை மொழி பேசும் - மழலை
பிள்ளைகள் பெற்றிடுவீர்
கள்ளில் விழுந்த வண்டாய் - அவை தரும்
கன்னல் சுவைத்திடுவீர்
ஆசைக்கு ஓரிரண்டு
பிள்ளைகள் போதுமென்று - கொஞ்சம்
தள்ளி இருந்திடுவீர்.



வாழ்வை நேசிக்க வேண்டும் - வரும்
துயரை மேவிட வேண்டும்
தாழ்வை நினைத்து - மனம்
சலித்திட வேண்டாம் - நம்பிக்
கையோடு உழைத்திட வேண்டும்.

மனைவியை நேசிக்கவேண்டும் - அவளின்
வேலையில் உதவிட வேண்டும்
வருஞ்சச்சரவுகள் தம்மை
பேசித் தீர்த்திட வேண்டும் - இருவரும்
விட்டுக்கொடுக்கவும் வேண்டும்
கட்டி இழுக்கவும் வேண்டும் - பிள்ளையை
தட்டிக் கொடுக்கவும் வேண்டும்
தட்டி அடக்கவும் வேண்டும் - ஒரு

வேளை உணவினை விட்டும் - கல்வி
கற்றிட வைத்தல் வேண்டும்.

சிக்கனம் வாழ்வுக்கு வேண்டும் - அன்றி
விக்கினம் மீதிதான் பாரும்
ஆனைப்பசிவந்த போதும் - சோள
பொரி போலச் சேர்த்திட வேண்டும்
ஆயிரம் சோதனைபாரும் - முயற்சி
ஆண்டவன் போல் தரும் நன்மை
இப்படி இல்லறம் நடந்தால்
அது எப்பவும் நல்லறந்தானே?

## சாட்டையை எடடா!




சாட்டையை எடடா கையில்
சாத்தியே கோவில் கதவை
சாதியை நிலை நிறுத்தும்
சூரமனம் படைத்த
சின்ன மனிதர்களை
சத்தியன் கிறிஸ்துவைப் போல்
சாடியே துரத்திடுவோம்.

பிஞ்சு மனங்களில் சாதி
நஞ்சினை விதைப்பவரின்
வணங்காக்க கழுத்தினிலே
இயந்திரக்கல்லைக் கட்டி
அஞ்சாது சமுத்திரத்தில்
தள்ளியே ஒழித்திடுவோம்.

கோவில்கள் பெருகி உள்ளக்
கோவில்கள் பெருக்கியதா
குடிசைகள் கோடியாக
கோபுர உயர்வதென்ன?

பாபேல் கோபுரத்தின்
பழைய கதை உமக்கு
பாடம் புகட்டுகின்ற
பாடம் தனைமறந்தீர்
பாவம் தனை புரிந்தீர்
கல்லுடன் கல்
நிற்காதன்றோ!



சாதிகள் வாழுமிந்த
சமூகத்தின் அமைப்பதனை
சத்திய வார்த்தைகளால்
சுட்டு இழக்கிப் புது
சமூகம் அமைத்திடவே
சிந்தனைத் தீயிடுவாய்.

சிந்தனை செய்வாய் தோழா
சிறுமதி படைத்த இந்த
பதர்களைப் புடைப்பதற்கு
புறப்படுகளம் கல்வாரிக்கு
நாட்டுவாய் சமத்துவத்தின்
செஞ்சிலுவைக் கொடியதனை.

## தந்பவி

இப்பொழுது
எனக்கு
அது
புரிந்து விட்டது.




வரலாற்று ஏடுகளில்
மனிதம் வென்றதான
வரலாறு இல்லை என்று.

வரலாற்று அத்தியாயங்களில்
ஆங்காங்கே
சில பக்கங்களில்
சில வரிகளில்
மனிதம்
கோரிக்கை அளவுகளில்
பவளக் கற்களாக
பட்டொளி சொட்டியதைத்தவிர
கொலுவிருக்கவில்லை.

ஒரு நிகழ்வுக்கு
ஒன்று போல்
பல காரணங்கள்
நிலவியிருக்கும்
பலதிற்குள்ளும்
ஒரு காரணம்
முதன்மையாக
முழுமையாக
முகிழ்ந்திருக்கும்.

அதை
அந்தக் காரணத்தை
சூக்கும வடிவில்
சுற்றிக் கொண்டிருக்கும்
அந்த
மகா காரணத்தை
கண்டு பிடிக்கும்
விண்ணைத் தொட்ட
என் உணர்விற்குள்ளே
நான்
தேடுதல் நடத்துகிறேன்.
மனிதத்தை கொலுவிருந்தும்
முழுமைக்குள்
பகுதியாக
நான்
பற்றி எரிய வேண்டும்!



## வீழ்ச்சி



எல்லோரும்
'இறால்' போட்டுத்தான்
'சுறா' பிடிப்பார்கள்
நாமோ
திமிங்கலத்தை வேட்டையாடும்
மனவேட்கையில்
சுறா போட்டல்லவா
இறால் பிடிக்கிறோம்.
அந்த
இறாலுக்கும்
சொந்தம் பாராட்டி
நமக்குள் நாமே
நையப் புடைபட்டபோது
நெறி கெட்டுப்போன
ஒரு
காட்டு அலியனை
வீட்டுக்குள் நுழைவதற்கு
பச்சைக்கொடி காட்டினோம்.

இழப்பு இல்லாமல்
இல்லை விமோசனம்
ஆனால்
இழப்பை மட்டும்
அறுவடை செய்யவா
உழைத்துக்களைக்கிறோம்?

## என்ன பிரி (பரி)வோ?



பேருந்துத் தரிப்பிலிருந்து
பிரிந்து செல்ல முடியாமல்
தயங்கி தயங்கி
அங்குலம் அங்குலமாய்
விலகிச் செல்லும்
மக்கள் மயமாக்கப்பட்ட
ஒரு தனியார் துறைப்பேருந்து போல
அவன்
அவளைவிட்டு
பிரிந்து செல்ல மனமின்றியே
வெளிநாட்டிற்குப் பறந்துசென்றான்.

## ஒரு தர்மத்தின் நளினம்




வாழ்க்கைச் சமுத்திரத்துள்
குதித்துச் சுழியோடி
களைத்து
இதயச் சிப்பிகளை
ஒவ்வொன்றாய்ப் பொறுக்கி
புத்த தர்மமுத்தை
பத்திரமாய்த் தேடினேன்.

இராகுபோல ஏக்கம்
இதயத்தை கௌவ்வ
ஒன்றும் புரியாமல்
நிமிர்ந்து பார்த்தேன்.

சாலை ஓரங்களில்
சந்து பொந்துகளில்
சடைத்துப் புடைத்த
அரச மரங்களாய்
கண்ணைக் கவருகின்ற
வண்ணச்சிலைகளாய்
புத்த தர்மம் எனைப் பார்த்து
நளினம் செய்தது.

# வேலி



வி. ஜெகநாதன்